# பக்தி விஜயம்..

ஆவணி - புரட்டாதி : 2012
ரதம் : 01
வழி : 04



இல்லங்களில் படிக்கவேண்டிய பக்தி மலர்



கந்தனின் நல்லூர் கண்டு ...

பூஜைகளின் அர்த்தங்கள்!

ஆவணியில் ஆனந்தம்

திருப்பாற்கடல் எங்கே ?

சிவனின் அபராதம்!

அனுமனும், பீமனும் ..

இந்துமதம் பெண்களைக் காக்கின்றது!

உலகின் சிறந்த ஆசிரியர் ..



உள்ளே ...

வாசிப்பு இன்பமும், ஆன்மீகமும் !

நம்நாட்டு சஞ்சிகை

# தொடர்ந்து வருகின்ற இதழ்களில் ...


குழந்தைப்பருவத்திலேயே
அவனுக்கு அசுர பலம்! ..
மிருகங்களின் பற்களும்,தந்தங்களுமே
அவனது ஆபரணங்கள்! காட்டுப்பன்றிகளும்,
அரவங்களும் அவனுக்கு
விளையாட்டுத் தோழர்கள்.வளர்ந்து
வாலிபனானதும் கொரூர வேட்டுவனான்.
ஒருநாள் ..
அவனுக்கோர் உறவு
கிடைத்தது.உலகம் கண்டும்,கேட்டும்
இராத காணிக்கையை அந்த அன்புக்குக்
கொடுத்தான். அது அவனால் மட்டுமே
இயலும். அந்த உறவு பரம்பொருள்
என்றுகூட அவன் அறியான் ..





சூதாட்டத்தில் திரௌபதியை பணயம் வைத்து
தோற்ற தருமரை அருச்சுனன் ஏசினான்.
பாண்டவர்களின் விதிப்படி ' மூத்தவரை எதிர்த்துப்
பேசும் இளையவனுக்கு மரண தண்டனை
தரவேண்டும் ' என்று கூறிவிட்டான் பீமன்.
கிருஷ்ணர் யோசித்தார் .. அருச்சுனன்
இல்லாவிட்டால் பாரதப்போரை யார் நடத்துவது?..
"பீமா,தன் பெருமையை தானே சொல்லிப் புகழும்படி
அருச்சுனனுக்கு கட்டளையிடு" என்றார். அவ்வாறே
ஒருநாள் முழுவதும் தனது வீர பிரதாபங்களை
கூறிமுடித்தான் அருச்சுனன். இது அவனுக்கு மரண
தண்டனையைவிட கொடுமையாக இருந்தது.

ராமன் காட்டுக்குப் போவதென்பது
உறுதியாகிவிட்டது. லட்சுமணன் ஒரு கணமும்
தாமதிக்காமல் தன் தாய் சுபத்திரையிடம் ஓடினான்.
தானும் ராமனுடன் வனம் செல்ல அனுமதி கேட்டான்.
"நிச்சயமாக மகனே, ராமன் இருக்கும் இடம்
வனமோ, எதுவோ அதுதான் உனக்கு அயோத்தி.."
என்று கூறிவிட்டு,.. "ஆனால் ராமனுடன்
செல்லாதே!" என்று சுமத்திரை மீண்டும் சொன்னதும்
திகைத்தான் லட்சுமணன்.
" ஆமாம் லட்சுமணா, நீ ராமனுடன் சேர்ந்து
செல்லும் அளவுக்கு சமமானவன் அல்ல.ராமனின்
பின்னாலேயே
போகவேண்டும்..புரிந்ததா?" என்றாள்.



**'பக்தி விஜயம்..' காவியங்களின் நுழைவாயில்..**



## அற்புதமான ஆவணி மாசத்திலே..

# வெற்றிக்கு வழி, விநாயகர் சதுர்த்தி விரதம்

ஒன்று தெரியுமா? ..

முருகப்பெருமான் சூரனை போரில் வீழ்த்தி வெற்றிவாகை புரிந்ததற்கும் ....,

தேவி பார்வதி அகிலலோக நாயகியாக அருட்கடாட்சம் தருவதற்கும் ....,

சக்கரவர்த்தி நளன் சிவஞானப்பேறு பெற்றதற்கும் ....,

ஆதிசேஷனும், மன்மதனும் அளவற்ற மேன்மை அடைந்ததற்கும் ...

விநாயகர் சதுர்த்தி விரதம் ஒரு முக்கிய காரணம்! இவர்களின் தவறாத விநாயக சதுர்த்தி விரதமும், விநாயக வழிபாடும் இவர்களின் புகழுக்கு வழிகாட்டியிருக்கிறது.

பேராற்றலும், பெருங்கருணையும் கொண்ட இத் தெய்வங்களுக்கே விநாயகரின் கடைக்கண் பார்வை அவசியமென்றால், சாதாரண மானிப் பூச்சிகளாகிய நமக்கு?

நாள் தப்பாமல் பிள்ளையாரைத் தேடிச்சென்று, அல்லது உள்ளத்திலே அமர்த்தி ஒரு விநாடி சரணடைந்து விடுவதே நாம் செய்யவேண்டிய வேலை. பதிலுக்கு, நம் காரியங்களை கச்சிதமாக முடித்துத் தந்துவிடுகிறார் கணபதி! அதிலும், விநாயகர் சதுர்த்தி விரதமானது பிறவி முழுதுமே பேறு தருகிறதென்றால் அதைத் தவறவிடுதல் தகுமோ? ..

இன்னும் ஒருபடி மேலேபோய் ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தியில் தொடங்கி, புரட்டாசி மாத வளர்பிறை வரை கடைப்பிடித்தால் கிடைக்கின்ற சிறப்பு மிக அதிகம். இதை விநாயகர் புராணம் எடுத்துக் கூறுகிறது.

அதிகாலை எழுந்து நீராடிவிட்டு ஆலயம் அல்லது பூஜையறையில் பூஜை செய்தல் வேண்டும். பகல் முழுதும் உணவருந்துதல் தவிர்க்கவும். கணபதி நினைவுடன் இருந்து மாலையில் நீராடி, வழிபட்டபின் பாலும், பழமும் அருந்தவும். முப்பது நாட்களும் இவ்வாறு தொடர்ந்து செய்தபின் இறுதி தினத்தில் விரத வழிபாட்டை பக்தி சிரத்தையோடு நிறைவுசெய்ய வேண்டும். அன்றைய தினத்தில் மற்றவர்களோடு சேர்ந்து அமர்ந்து ஒன்றாக உணவருந்த வேண்டும்.

இப்படியாக கடும் விரதம் மேற்கொள்ளமுடியாதவர்கள் இவ்விரத காலத்தில் சில நாட்களாவது கடைப்பிடிக்கலாம். ஏனைய நாட்களில் உப்பில்லாமல் பொங்கல், பால், பழம் ஆகியவை உண்டுவருவது சிறப்பாகும்.

இப்படி முப்பது நாட்களும் இருக்க இயலாதவர்கள் விநாயகர் சதுர்த்தி நாளிலாவது கண்டிப்பாக விரதம் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

இது, நம் மேன்மைகளுக்காக மகாகணபதியை துணைக்கு வைத்துக்கொள்ளும் அருமையான வழி! ...


# பக்தி விஜயம்..

100/=

இந்து சமூகத்தின் ஆன்மீக எழுத்துப் பணியில் ..

இதழ் உருவாக்கம், கணனி வடிவமைப்பு, நிர்வாக இயக்கம் :

**எஸ். பி. முத்து**

அனுசரணை :

**வை. திருச்செல்வம்**

இந்த பக்திச் சஞ்சிகை வெளிவரும் முகவரி :

555, புதுத்தெரு,
மன்னார்,
இலங்கை

தொலைபேசி :

071- 3861168
077- 4335144
023- 2250071

மின்னஞ்சல் :

nenjame@gmail.com

சைவ அடியார்களுக்காக பல நூல்கள், சுவடிகள், சஞ்சிகைகள், இணையத் தளங்களிலிருந்து மூல விஷயங்கள் பெற்று, இலகு தமிழில் தரப்படுகின்றன ..

பெரியோர்கள் குறை, நிறைகளை எடுத்தியம்புவதோடு, வாசகர்களும் சமயச் செய்திகள், ஆக்கங்கள், விமர்சனங்களை தந்து ஆதரிக்க வேண்டுகிறோம் ..



# தேரேறி வருவார் .. விழியே, வழிமீதிரு!



'வந்த வினையும், வருகின்ற வினையும் 'கந்தா' என்றிடக் கரைந்திடுமே ..' என்பர்.

அத்தகைய கந்தனே வருகிறான், அதுவும் வண்ணத்தேரிலெனில் வினைகளுக்கேதிங்கு வேலை?

நாளொரு அலங்காரமும், பொழுதொரு புன்னகையுமாக உள்வீதி, வெளிவீதியிலே உள்ளங்களை கொள்ளையிடும் நல்லூர் அழகனின் திருவிழா உச்சத்தை நெருங்கிடும் இவ் வேளையில் அங்கே பேசுகின்ற நெஞ்சங்கள் ..

''போருக்கு முன்னே ஆறு நாட்கள் விரதமிருந்து வேள்வி நடத்தினார் வேலன். சிவபெருமானை நோக்கி நடத்திய யாகத்தின் பலனாக கிடைத்த முக்கண்ணன் ஆசியோடு, சூரபத்மனை நோக்கி புயலெனெப் புறப்பட்டார் ..''

என்று சொல்லத்தொடங்கினார் ஒரு பெரியவர். வெகு சுவாரஸ்யமாக நெருங்கி கேட்க ஆயத்தமானபோது உள்ளேயிருந்து 'அரோகரா! ..' ஒலிகள் கேட்கவே தன்னை மறந்து முருகனுடன் அவர் ஒன்றிவிட்டார். சூரனுடன் திருமுருகன் நடத்திய வீரவிளையாட்டுக்களை ரசிக்கும் சந்தர்ப்பம் தவறியது.

ஆலயத்தின் பின்வீதி முலையில் இன்னொரு நெஞ்சம் பக்தியில் கசிந்தபோது ..

'' சிவபெருமானின் ஆனந்த தாண்டவத்தை ரசித்தபோது, மகா விஷ்ணுவின் கண்களில் இருந்து இரண்டு சொட்டு கண்ணீர்த்துளிகள் சிந்தின. அதில் அமிர்தவள்ளி, சுந்தரவள்ளி என்ற இரண்டு மங்கையர்கள் தோன்றினார்கள். இருவரும் கந்தக் கடவுளை மணக்க விரும்பினார்கள். முருகனோ அவதார நோக்கம் முடியும்வரை திருமணத்திற்குத் தயாராக இல்லை .. இருந்தும் கூறினார் ..'' என்று மேலும் தொடர்ந்தபோது ..



# நல்லையில் உருகும் நெஞ்சங்கள்!..





.. புல்லரிக்க வைக்கும் தெய்வீக சம்பவங்கள் கந்தனின் காவியத்தில் துளிகளாக கிடைக்கின்றன..

''அந்த மங்கையரில் ஒருவர் மண்ணிலும், மற்றவர் விண்ணிலும் பிறந்து தவம் செய்திட உத்தரவிடுகிறான் வேலன். அவ்வாறே விண்ணில் இந்திரனின் மகளாகப் பிறந்தவளை அவனின் யாணையாகிய ஐராவதம் பாசத்தோடு வளர்க்கிறது. தெய்வ யாணையால் இவ்வாறு வளர்க்கப்பட்டு தெய்வாணை ஆகிறாள் ..

மண்ணில் பிறந்த மற்ற நங்கையோ வள்ளிக்கிழங்குகளிடையே கிடந்தபோது நம்பி ராஜனால் கண்டெடுக்கப்படுகிறாள். நம்பி ராஜன் வேளிமலை அரசன். அவனது மனைவியின் பெயர் மோகினி. வேட்டைக்குச் சென்றபோது அக்குழந்தை கிடைக்கிறது ..'' என்று அந்த அம்மா கூறிக்கொண்டிருந்த வேளையில் நெரிசல் அதிகரிக்கவே நாமும் இடம் மாறினோம் ..



கடைகள், பொருட்கள் என்று இந்தமுறை அதிகமாகவே நெருக்கடிகள் பெருகியிருந்தன. கந்தனோடு ஒன்றி வழிபடலாம் என்று வருகின்ற பக்தர்களுக்கு இது சோதனைதான் ..

''ஏ நைன் பாதை திறந்தபிறகு வருசா வருசம் இப்படித்தான் சனம் பெருகுது .. எத்தனையோ வருசம் வரமுடியாம கிடந்த கோயில். ஏதோ இப்பவெண்டாலும் வருகினம் பாவம் ..''

''பிள்ளையின்ர கையப்புடிச்சுக்கொள் கவனமா.. அர்த்த சாமப்பூசை முடிஞ்சதும் புறப்படுவம் ..''

''தேருக்கு முதல்நாளே இந்த இடத்துக்கு வந்துடு மச்சான் ..''

என்று எங்கெனும் பக்தியும், மகிழ்ச்சியுமாக குரல்கள் கேட்டபடிதான் .. முருகன் என்றாலே பரவசம்தானோ! ..

ஒரு முருகபக்தர் இயற்றிப்பாடுவதும் கேட்கிறது !..

## இந்திரன் மருகனே ..

கந்தன் புகழினைப் பாடு -- அவன்
காலடியை நீ நாடு .. -- உன்
சிந்தையும், செயலும் ஒன்றுபட்டே நீ
அவனைக் கும்பிடு போதும் .. பல
விந்தைகள் புரியும் வேலவப் பெருமான்
உனக்கு அருள்வான் பாரு ..
(கந்தன் புகழினைப்..)

மாம்பழம் வேண்டி மயிலினில் ஏறி
உலகினைச் சுற்றிய சாமி .. -- அந்தத்
தேங்கனி இல்லைத் தனக்கெனச் சினந்து
பழிநியில் அமர்ந்திட்ட சாமி ..
தேம்பிடும் எம்மைத் தேற்றிட வல்ல
தெய்வமே தணிகையின் சாமி .. --
தன்னைப்
போற்றிடும் அன்பர் குறைகளைப் போக்கும்
நல்லூர்க் கந்த சாமி ..
(கந்தன் புகழினைப்..)

நாவினில் வேலால் எழுதியே திருப்புகழ்
பாடிட வைத்திட்ட சாமி .. -- அந்தப்
பாவினைப் பாடிப் பூவினைத் தூவின்
மயங்கிடும் செந்தமிழ்ச் சாமி ..
தேவரைக் காத்து இந்திரன் மகளை
மணந்திட்ட பரங்குன்றின் சாமி .. -- அந்த
மூவரை விடவும் பெரியவன் என்றே
புவியது புகழ்ந்திடும் சாமி ..
(கந்தன் புகழினைப்..)

சூரனைச் சேவல் மயிலென ஆக்கி
அருளிய செந்தூர்ச் சாமி .. -- அந்தக்
கூரிய வேலால் வினைகளைக் கொல்லும்
செல்வச் சந்நிதிச் சாமி ..
காரென அருளினைப் பொழிந்திடும்
மாவிட்ட
புரத்தினில் வாழ்ந்திடும் சாமி .. -- இந்தப்
பாரது அறிந்த கதிர்காமத்தில்
உறைந்திடும் தமிழரின் சாமி ..
(கந்தன் புகழினைப்..)

பக்த வெள்ளத்தில்
பரவசமாய்
பாட்டியற்றித்
தந்தவர் :



**சின்னையா சிவபாலன்**
செல்வநகர்,
எழுத்தூர்,
மன்னார்.

தெரிந்த தெய்வங்கள் .. தெரியாத தகவல்கள்!

# அர்த்தநாரீஸ்வரர்



சிவனும், உமையும் இரண்டரக் கலந்த திருவுருவமே அர்த்தநாரீஸ்வரர் ஆவார்.



அர்த்தநாரீஸ்வரம் என்றால் இணைந்த பொருள் என்று அர்த்தம். அர்த்தம் என்றால் பாதி என்றும், நாரீ என்றால் பெண் எனவும், ஈஸ்வரர் என்றால் சிவம் எனவும் பொருள்.

இறைவன் ஆணா, பெண்ணா என்ற கேள்விக்கு இரண்டும் கலந்ததுதான் என்று பதில் தருகின்ற கோலத்தில் மாதொரு பாகனாக காட்சியளிக்கிறார் இறைவன்.

பிருங்கி என்ற முனிவர், சிவபெருமானை மட்டுமே வலம் வந்து வழிபடும் வழக்கம் உள்ளவர். இது கண்டு வருந்திய தேவி தவமிருந்தாள். விரதம் இருந்து ஈசனை வேண்டி வழிபட்டாள்.

பரம்பொருள் மனம் கனிந்தது.

பார்வதி அம்மைக்கு காட்சி தந்து, அவளுக்குத் தனது இடப்பாகத்தை அளித்து என்றென்றும் தம்மைப் பிரியாதிருக்கும் வரமும் தந்தது. இப்படி உமையவளை தனது இடப்பாகத்தில் கொண்டு அர்த்தநாரீஸ்வரரானார் பெருமான் என்றும் புராணக்குறிப்புண்டு.



## சிவனின் முக வகையில் அர்த்த நாரீஸ்வரர்!

ஒரு முகம் :
சந்திரசேகர்
இரு முகம் :
அர்த்தநாரீஸ்வரர்
மூன்று முகம் :
தாணு மாலயன்
நான்கு முகம் :
நான்கு கொலாம்
அவர்தம் முகமாவள
ஐந்து முகம் :
சதாசிவம்
ஆறு முகம் :
முருகக்கடவுளை
தோற்றுவித்த முகம்
இருபத்தைந்து முகம் :
மகா சதாசிவர்



கைலாயத்தில் பழத்தினால் ஏற்பட்ட தகராறினால் கோபம்கொண்டு, முருகன் புறப்பட்டுச் சென்று விட்டார். இதனால் சோகமுற்றிருந்த பார்வதி தேவியை மகிழ்விக்க இயற்கை வனப்புமிக்க தாருக வனத்திற்குக் கூட்டிவந்தார் சிவபெருமான்.

பல்வேறு இயற்கைக் காட்சிகளால் பரவசமுற்ற தேவி, முருகனின் கவலையை மறந்திருந்த நேரம் .. முல்லைக்கொடி யொன்று மரமொன்றை சுற்றிப்படரும் காட்சியை காட்டினார் ஈசன். அதைக்கண்டு வெட்கப்பட்டு, நாணிய உமை தனது கரங்களால் சிவனின் கண்களை மூடினாள். மறுகணம் இருள்பரவி அண்டசராசரங்க ளையும் மூடியது. தேவி தனது கைகளை விலக்கியபின்னரே இருட்டு நீங்கியது.

திடீரென்ற ஏற்பட்ட இந்த இருளின் காரணமாக உலகின் அனைத்து வழிபாடுகளும் தடைப்பட்டதால் தேவர்களும், ரிஷிகளும் சிவபெருமானிடத்தில் சென்று முறையிட்டனர்.

இதனால் வருந்திய பார்வதி தாம் பிரிந்திருப்பதாலேயே இப்படியான நிலைகள் வருகின்றனவென்றும், இரண்டறக் கலந்து ஒருவரானால் இத்தவறுகள் எழாது என்றும் வேண்டினாள். இதற்கிசைந்த இறைவன் பல விமோசனங்களையும், தல யாத்திரைகளையும் பார்வதிக்கு அருளி, அதன் பயனால் இறுதியில் தன்னுடன் இணைத்தார்.



அறியவேண்டிய மந்திரங்கள்!

# காயத்ரி



''ஓம் பூர் புவஸுவ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோந ப்ரசோதயாத்''

**கா**யத்ரி மந்திரத்தை உலகுக்குத் விசுவாமித்திர மகா முனிவர் ஆவார்

பெரும் சக்தி வாய்ந்த முனிபுங்குவர்களில் ஒருவராகிய இவர் ஆரம்பத்தில் கௌசிகன் எனும் பெயர் கொண்ட மன்னனாக அரசாண்டார் ..

ஒருநாள் மாமுனிவர் வசிவஷ்ட வலிமையை நேரில் கண்டு வியந்தார் அவர்போல் தவ சிரேஷ்டராக வரவே என விரும்பினார். உடனடியாக அரசுரிமையைத் துறந்து, நாட்டைவிட் வெளியேறினார். கானகத்தை அடைந் கடுந்தவம் புரிந்தார்.

அத் தவத்தின் உக்கிரம் தாள உலகம் துவண்டு போகவே, அவரைச் சாந்தப்படுத்தும் நோக்கில் வசிஷ்டரே முன்னால் வந்து நின்று ''பிரம்ம ரி ..''
என்று அழைத்தார். வசிஷ்டரே தமது 'பிரம்ம ரிஷியே ..' என்று அழைத்துவிட்டதால் குளிர்ந்துபோனார் கௌசிகர்.

இந்த கௌரவத்தின் மூலமாக விசுவாமித்திரர் என்று பெயர் பெற்று, புராணங்களில் பிரம்மிப்பூட்டும் பல நிகழ்ச்சிகளுக்கு நாயகனாக விளங்கினார்.

தாமும் ஒரு பிரம்ம ரிஷியாகிவிட்ட ஆனந்தத்தில் ஒரு சக்தி வாய்ந்த மந்திரத்தை இயற்ற விரும்பினார்.

முன்னொருமுறை படைத்தல் கடவுள் பிரம்ம தேவன் ஒரு பெரிய யாகத்தை நடத்தினார். புஷ்கரம் என்ற தலத்தில் அவர் மேற்கொண்ட அந்த யாகம் மகோன்னதம் நிரம்பியதாக இருந்தது. எனவே, இந்த யாகத்தின் பலனால் முழு உலகமும் பயனடைய வேண்டுமென விரும்பினார். அதற்காக அந்த யாகத்தில் காயத்ரி தேவியை உருவாக்கினார்.

பிரம்மதேவர் யாகத்தில் உருவாக்கிய அந்த காயத்ரி தேவியைக் குறித்து இப்போது ஒரு மந்திரத்தை இயற்றினார் விசுவாமித்திரர். இதுவே காயத்ரி மந்திரம் ஆனது.

'எவர் நம் அறிவைத் தூண்டி பிரகாசிக்கச் செய்கின்றாரோ, அந்த ஜோதி மயமான இறைவனைத் தியானிப்போமாக ..!'

என்பது இதன் பொருள்.

காயத்ரி மந்திரத்தை ஜபிக்கும்போது சூரிய பகவானையும், காயத்ரி தேவியையும், ஸ்ரீமந் நாராயணனையும் ஒருமுகமாக நினைக்க வேண்டும். அதனால் கிடைக்கின்ற சக்திகளும், புத்துணர்வும் வர்ணிக்க முடியாதவை. ஆழ்ந்து இம் மந்திரத்தை தியானிப்பவர்களுக்கு ஆத்மபலம், மனோ பலம், தேகபலம், யோகபலம் என்ற அளவற்ற சித்திகள் கைகூடுகின்றன.

24 அட்சரங்களைக்கொண்டது காயத்ரி மந்திரம். இதை தினசரி ஜபித்து வந்தால் பூர்வ ஜெனமப் பாவங்கள் அகலும். சக்திகள் பெருகும், மனஉறுதி ஏற்படும். காயத்ரி என்றால் தன்னை ஜபிப்பவனைக் காப்பாற்றுவது என்று பொருள்!

தினமும் குறைந்தது 108 முறை ஜபித்தால் நன்று. ஆபத்து காலங்களில் 28 அல்லது, 10 தடவை உச்சரித்தால் எண்ணங்கள் தெளிவடையும். உடலும், உள்ளமும் பலமும், தூய்மையும் பெறும்.

எந்தவித ஆபத்துக்களும் இதை உச்சரிப்பவர்களுக்கு வராது. ஏனைய மந்திரங்களுக்கெல்லாம் தாய் போன்றவள் காயத்ரி.

காயத்ரி மந்திரத்தை ஜபம் செய்ய எந்த வயதெல்லையும் கிடையாது. குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை அனைவருக்குமே சக்தி தரவல்ல சஞ்சீவி இது.

காயத்ரி மந்திரத்திற்கு சாவித்ரி என்றும், சரஸ்வதி என்றும் பெயர்கள் உண்டு. மூன்று வேளைகளில் மூன்று தேவியரை நோக்கி இம்மந்திரம் செல்கிறது. காலையில் காயத்ரியையும், பகலில் சாவித்ரியையும், மாலையில் சரஸ்வதியையும் இம்மந்திரம் தியானிக்கிறது.

காயத்ரி மந்திரம் தெய்வத்தை உணரவும், அடையவும் வழி காட்டுகிறது. நமக்குள்ளேயே குடிகொண்டிருக்கும் தெய்வத்தை எளிதாக காட்டுகிறது. நம்முள் இருக்கின்ற பிரபஞ்ச சக்தியை அடைய வைக்கிறது.

மந்திர வழிபாட்டில் காயத்ரிக்குத்தான் முதலிடம். மற்ற மந்திரங்கள் அதன்பின்னரே ஜபிக்கப்படுகின்றன. காயத்ரி மந்திரம் இல்லாமல் சொல்லப்படும் எந்த மந்திரமும் ஆதாரமற்றது என வேதங்கள் கூறுகின்றன ..

பிரயாணத்தின்போதும், தனியே நடந்து செல்லும்போதும், ஓய்வு நேரங்களின்போதும் சொல்லலாம். குறிப்பாக மனச்சஞ்சலம், பயம், சோர்வு சமயங்களில் இம்மந்திரத்தைப்போல உதவுபவர் யாருமே இருக்க முடியாது.

இந்த மந்திரத்தில் 'ஓம்' என்ற பிரணவமும், மூன்று வியாஹ்ருதிகளும், மூன்று பாதங்களுள்ள காயத்ரி மந்திரமும் உள்ளன. ஒரே மூச்சில் சொல்லி முடிக்காமல் மூன்று பாகங்களாகப் பிரித்து ஜபிக்கும்போது அதிக பலன் கிட்டுகிறது.

வேதனைகளையும், தாழ்வுமனப்பான்மை யையும் களைந்து ஜீவ ஆரோக்கியம் தரவல்ல அரிய நிவாரணம் இது. இந்த மந்திர உச்சாடனம் கையில் இருந்தால் போதும். நூறு பேரின் பாதுகாப்பு இருப்பதற்குச் சமம்.

முதலில் ஓம் என்ற பிரணவத்திலும், இரண்டாவதாக வியாஹ்ருதிகளிலும், மூன்றாவதாக தத்ஸ விதுர் வரேண்யம் என்ற முதல் பாதத்திலும், நான்காவது பர்கோ தேவஸ்ய தீமஹி என்ற இரண்டாவது பாதத்திலும், ஐந்தாவது தியோயோ ந ப்ரசோதயாத் என்ற மூன்றாம் பாதத்திலும் நிறுத்திச் சொல்லவேண்டும்.

1008 அல்லது 108 தடவைகள் காயத்ரி மந்திரத்தை உச்சரித்தல் அதிக சிறப்பு வாய்ந்ததாகும். ஆனால், மனம் முழுமையாக ஈடுபட்டிருக்காவிடில் பலன் இல்லை அதற்கு பதிலாக முழு மனதுடன் 27 தடவைகள் கூறினால்கூட பெரும் பயனுண்டு.

**காலையில் ..**
கிழக்குமுகமாக சூரியனைப் பார்த்து நின்றுகொண்டு, இரு கைகளையும் முகத்திற்கு எதிராக கூப்பிக்கொண்டும்,

**நடுப்பகலில் ..**
ழக்குமுகமாக அமர்ந்துகொண்டு, கைகளை மார்புக்கு எதிரே கூப்பிக்கொண்டும்,

**மாலையில் ..**
மேற்குமுகமாக உட்கார்ந்துகொண்டு கைகளை நாபிக்கு சமமாக கூப்பிக்கொண்டும் காயத்ரி மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.



# யார் இந்த வள்ளல்!

ஒருமுறை பாண்டவர்கள் கிருஷ்ணரோடு உரையாடிக்கொண்டிருந்தார்கள்.

அப்போது தர்மங்களில் மட்டுமல்ல, கொடையிலும் சிறந்தவர்கள் தாங்களே என்ற தொனியில் அவர்களின் பேச்சு இருந்தது.

இதை அவதானித்த பரமாத்மா அவர்களைத் திருத்த எண்ணினார். அமைதியாக பாண்டவர்களிடம் கூறினார்.

''நீங்கள் நினைப்பது தவறு, கர்ணனே கொடையில் சிறந்தவன் ..''

பாண்டவர்கள் இதனை ஏற்க மறுத்ததால், இரண்டு தங்க மலைகளை உருவாக்கினார் பகவான். பாண்டவர்களிடம் கேட்டார் ..

''நீங்களே கொடையில் சிறந்தவர்களானால், இன்று சூரியாஸ்தமனத்திற்குள் இந்த இரண்டு தங்க மலைகளையும் தானம் கொடுத்துவிட வேண்டும். முடியுமா? ..'' என்றார்.

''இவ்வளவுதானா ..'' என்ற பாண்டவர்கள் சுற்றிலுமிருந்த கிராம மக்கள் அனைவரையும் அழைத்து வந்தனர். அத்தனை பேருக்கும் சுமக்கமுடியாத அளவுக்கு தங்கத்தை வெட்டி வெட்டிக் கொடுத்தார்கள்.

போவோர் வருவோர் என்று எல்லோரையும் கூப்பிட்டு தங்கமலையை வெட்டிக்கொடுத்துக்கொண்டே இருந்தார்கள்.

பொழுதும் சாயத்தொடங்கியது. தங்கமலையோ கால்வாசியும் தீர்ந்தபாடில்ல.

இன்னும் சில நிமிடங்களில் சூரியன் மறைந்துவிடும்.

தர்மர்சோர்ந்துபோய் கூறினார் ..

''கண்ணா, தோல்வியை ஒப்புக்கொள்கிறோம் .. எங்களால் கால்வாச் மலையைக்கூட கொடுக்கமுடியவில்லையே!..

சிரித்துக்கொண்டே கிருஷ்ணர் கர்ணனை வரவழைத்தார்.

''கர்ணா, இந்த இரண்டு தங்கமலைகளையும் பொழுது சாய இருக்கு இந்த ஒரு நிமிடத்தில் உன்னால் தானம் செய்துவிட முடியுமா? ..'' என்று கேட்டார்.

''அதற்கென்ன மாதவா, ..'' என்றபடி மலைகளின் அருகே சென்றான் கர்ணன்.

'இவன் எப்படி இந்த ஒரு நிமிடத்தில் இரண்டு மலைகளையும் தந்து முடிப்பான்! .. என்று அனைவரும் ஆச்சரியமாகப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

இதோ, சூரியனும் மறையப்போகிறது.

அவ்வழியால் சென்ற ஒரு வழிப்போக்கனை கைதட்டி அழைத்தான் கர்ணன். ''இந்தா, இந்த இரண்டு தங்க மலைகளையும் நீ வைத்துக்கொள் ..''

என்றுவிட்டு அரண்மனைக்குத் திரும்பினான்.

சூரியன் மறைந்தது.

திருந்திய பாண்டவர்களைப் பார்த்து புன்னகைத்தார் பரந்தாமன்.



# மாணவர் சமய அறிவுப்போட்டி
# இல: 04



( விடைகள் இதே சஞ்சிகையில்! ..)

அன்பான மாணவர்களே,

நமது சமய அறிவை ஊட்டும் வண்ணம் இந்த 'பக்தி விஜயம் ..' வெளிவருகிறது. இது உங்களுக்கும் வழிகாட்டியாக திகழ்கிறது. பரீட்சைகளில் புள்ளிகள் பெறுவதற்கு மட்டுமல்ல, வாழ்க்கையிலும் வெற்றிபெறுவதற்கு சமயத் தகவல்கள் மிக அவசியம்.

இல: 02 சமய அறிவுப்போட்டியில் பெருமளவில் நீங்கள் பங்கு பற்றியிருந்தீர்கள். **அனைவரையும் பாராட்டுகிறோம் ..**

**இல: 02 போட்டிக்கான விடைகள்**


*01. சேக்கிழார், 02. ஐம்பெரும், 03. புஷ்பக விமானம், 04. நகுலன், 05. துர்வாசர், 06. நீலகண்டன், 07. ராமகிருஸ்ண பரமஹம்சர், 08. மாதுமை, 09. அனுமன், 10. கூர்ம அவதாரம்.*

1ம் பரிசு : ஜொலியா கதிரேசன், தரவன் கோட்டை, மன்னார்.

2ம் பரிசு : இலக்கியன், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

3ம் பரிசு : சுபாங்கி இராஜகுலேந்திரா, 34,1சி, நெல்சன் பீளேஸ், கொழும்பு 06

## இம்மாத வினாக்கள் --



01. பிள்ளையாரை நினைந்து நோற்பது .............................. விரதமாகும்.
02. காயத்ரி மந்திரம் அருளியவர் ............................ முனிவராவார்.
03. சுந்தரரை பழிவாங்க ................................ சபதமேற்றார்.
04. ஜடாயுவின் உயிர்நிலை ..............................இல் இருந்தது.
05. தன் தாயின் உடலுக்கு பட்டினத்தார் .......................மரத்தில் சிதைமூட்டினார்.
06. துரோணரின் சபதத்தை ........................... நிறைவேற்றினான்.
07. 'தங்கமலையை தானம் செய்' என்று கர்ணனுக்கு ........................... கூறினார்.
08. சிவனும், உமையும் இணைந்த திருக்கோலம் ......................... ஆவார்.
09. ''பூதஞ் சூழப் பொலிய வருவார் ............................. ''
10. சண்டேஸ்வரரை .................... வருவது ஆகாது.

சரியான விடைகளை எழுதி அனுப்புகின்ற மாணவர்கள், குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசளிக்கப்படுவார்கள். விடைகளை 30.08.2012 க்கு முன்னர் அனுப்பி வைத்தல்வேண்டும்.


அனுப்பவேண்டிய முகவரி :
*ஆசிரியர்,*
*'பக்தி விஜயம் ..'*
*555, புதுத்தெரு, மன்னார்.*



**(இப்பக்கத்தை கத்தரிக்காமல் வேறு பேப்பரிலேயே எழுதி அனுப்பவும்.)**

தெரிந்துகொள்வோம் ..


## நாயன்மார்களின் மெய்சிலிர்க்கும் தொடர் ..




# பகையா, நட்பா ..?

சோழவள நாட்டின் அழகு நதியாம் காவிரியின் வடகரையில் இருக்கின்ற ஊர் திருப்பெருமங்கலம். சோழ மன்னர்களின் தளபதிகளாக பணியாற்றிய பரம்பரையினர் இங்கே இருந்தனர். ஏயர்கோன் என்று தனிச்சிறப்புடன் அழைக்கப்பட்ட இப் பழங்குடியினர் வேளாண்மையிலும் சிறந்து விளங்கியவர்கள்.

சிறப்பும், பெருமையும் மிக்க இத்தகைய குலத்தில் தோன்றியவர் கலிக்காமர். சிறந்த சிவபக்தராகிய இவர் கல்வி வேள்விகளிலும், படைக்கலப் பயிற்சிகளிலும் திறமை பெற்றவர். சிவத்தொண்டுகளிலும், திருப்பணிகளிலும் அளவற்ற தீவிரம் கொண்டவர். அவரிடம் காணப்பட்ட இன்னொரு சிறப்பு, சிவபிரானை மதிக்காமல் நடப்பவர்களை கண்டால் அடியோடு அவர்களை வெறுப்பார். அதுமட்டுமல்ல, அவர்களை தண்டித்தும் விடுவார்!



அவருடைய இந்த கொள்கையானது ஒரு கட்டத்தில் சுந்தரமூர்த்தி நாயனாருக்கே ஆபத்தாய் முடிந்தது.

சுந்தரரின் குணம்தான் தெரியுமே! அவருக்கு ஈசனுடன் உள்ள நெருக்கம் காதலர்களுக்குள்ளேகூட வராது. தனது பிரயமான சுந்தரன் என்ன சொன்னாலும் செய்வது பெருமானுக்கும் பிடிக்கும். இதனால் தனது சேவகனாகவே சிவபிரானை கருதும் அளவுக்குப் பழகிவிட்டார் நம்பியாரூரர்.

பரவை நாச்சியாருடன் நடத்திய ஊடலில் தூதாக சிவனாரையே அனுப்பி வைத்தார் என்றால் சுந்தரருக்கு எந்தளவு தைரியம் இருந்திருக்கவேண்டும்! பக்தனுக்கும் இறைவனுக்கும் இடையில் ஏதோ நடக்கிறது, எப்படியோ போகட்டும் என்று நாம் விட்டுவிடலாம். ஆனால் கலிக்காமர் விடுவாரா?

விஷயம் எப்படியோ கலிக்காமரின் காதுக்குப் போய்விட்டது. அவ்வளவுதான் . கொதித்துவிட்டார். '' அபச்சாரம்! அடியான் என்றால் ஆண்டவனையே ஏவலுக்கு அனுப்புவதா? என்ன துணிச்சல்! பெண்பித்தனான இவனா பெருமானின் தொண்டன்? தேவருக்கும், மூவருக்கும் கிட்டாத என் ஐயனின் திருவடிகளை பெண்பித்தின் காரணமாக திருவாரூர் வீதியிலே அலையிவிட்டானே .. அவனைச் சும்மா விடமாட்டேன் ..'' என்று கர்ஜித்தார்.

குமுறினார், கொந்தளித்தார், சுந்தரரை பலி வாங்க ஆவேசம் கொண்டார்.

கலிக்காமரின் கடுஞ்சீற்றத்தை சுந்தரமூர்த்தி நாயனாரும் அறிந்தார். அப்போதுதான் தனது தவறு தெரிந்தது. எந்நாட்டிற்கும் இறைவனாகிய பெருமானை தனிப்பட்ட காரியத்திற்காக சிரமப்படுத்தி விட்டோமே என்று கண்கலங்கி நின்றார். இதற்கொரு தீர்வைத் தருமாறு பெருமானை வேண்டியுருகினார் ..

# கலிக்காமரும் சுந்தரரும்

**சிவ பக்தியில் சிறந்தவர் யார்?**
**இக்கட்டில் எம்பெருமான் ..**
**இறைவனே இணைத்தார்! ..**

தனது அடியவர்களின் இருவேறு அன்புப் பிரவாகத்தை எண்ணிப் புன்னகைத்தார் சிவபிரான். அன்பிலும், தம்மீது கொண்ட பக்தியிலும் ஒருவருக்கொருவர் சளைக்காத அவர்களின் உரிமையை உலகிற்கு உணர்த்த திருவுளம் கொண்டார்.

இருவரையும் ஒற்றுமைப்படுத்த விரும்பிய இறைவன் கலிக்காமருக்கு சூலைநோய் வரும்படி செய்தார். இதனால் சூலைநோய்க்கு இலக்காகிய கலிக்காமர் வருத்தம் தாங்கமுடியாமல் பெரிதும் துன்பப்பட்டார். எத்தனையோ மருத்துவர்கள் சிகிச்சையளித்தும் அவரின் உபாதை குணமாகவில்லை. எனவே, பரமேஸ்வரனை நோக்கி தொழலானார்.

ஒருநாள் இரவு கலிக்காமரின் கனவில் பெருமான் தோன்றினார். ''இந்நோயைத் தீர்க்கும் வழியை நம் தொண்டன் சுந்தரனே அறிவான் .., வேறெவர்க்கும் இயலாது'' என்றார். இதைக்கேட்டுவிட்டு கலிக்காமர் வணங்கி மொழிந்தார். ''பெருமானே, உம் திருப்பாதத்தை அலையவிட்ட அந்த சுந்தரனின் உதவி எனக்கு வேண்டாம். அவனால் நான் பிழைப்பதைவிட இந்நோயால் நான் மடிவதே உத்தமம். '' என்று உறுதியாகக்கூறிவிட்டார்.

புன்னகைத்துவிட்டு அங்கிருந்து மறைந்த பெருமான் சுந்தரரின் கனவில் தோன்றி ''சுந்தரா, நீ உடனே சென்று கலிக்காமனை வருத்துகின்ற நோயை தீர்ப்பாயாக ..'' என்றார்.

கண்விழித்தெழுந்த நம்பியாரூரர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். கலிக்காமருடன் பகை நீங்கி நட்புறவுகொள்ள சந்தர்ப்பம் தந்த பெருமானைத் துதித்துவிட்டு, உனடியாக பெருமங்கலம் நோக்கி விரைந்தார்.

சிவகட்டளையை ஏற்று, திருவாரூரிலிருந்து சுந்தரர் புறப்பட்டுவருகின்ற சேதி கலிக்காமருக்கு எட்டியது. இதனால் உள்ளம் குமுறி உடைவாளை உருவினார் கலிக்காமர். ''அவனால் இந்த நோய் விலகுவதைவிட என் உயிர் போவதே மேல்'' என்றவாறு வாளால் தனது வயிற்றைக் கிழித்தார். அவரது உயிர் பிரிந்தது.

இதைக்கண்டு துடித்த அவரது துணைவியாரும் உயிரைவிட எத்தனித்தபோது, சுந்தரர் வந்துவிட்டதாக வந்து சொன்னார்கள். உடனே அந்த உத்தமியும் கணவனின் உடலை மறைத்துவைத்துவிட்டு, ''யாரும் அழாதீர்கள் ..'' என்று தனது கண்ணீரையும் மறைத்துக்கொண்டு வந்து நம்பியாரூரரை வணங்கி, வரவேற்றாள்.

கலிக்காமர் எங்கே இருக்கிறார் என்று கேட்டபடி தேடிய சுந்தரரிடம் '' அவர் உள்ளே உறங்கிக்கொண்டிருக்கிறார் ..'' என்று வேலையாட்கள் கூறினார்கள். ''அவரைப் பார்க்காமல் திரும்பேன் '' என்று உள்ளே நுழைந்த சுந்தரர் இரத்தவெள்ளத்தில் கிடந்த கலிக்காமரைக்கண்டு கதறினார். ''இவர் சென்ற வழியே நானும் செல்வேன் ..'' என்றவாறு கீழே கிடந்த வாளை எடுத்தார்.

அனைவரும் திகைக்கவே, சிவபிரான் அருளால் உயிர்பெற்றெழுந்த கலிக்காமர் சுந்தரரின் கையிலிருந்த வாளைப் பற்றிக்கொண்டார். பகை மறந்த நிலையில் கலிக்காமரும், பழி நீங்கிய நிலையில் சுந்தரரும் கட்டித்தழுவி நண்பர்களாயினர் ..

(இன்னும் வருவார்கள் நாயன்மார்! ..)



## அன்னையின் மஞ்சம் பாரீர் ! ..



ஆலயங்களில் அழகுற தரிசனமளிக்கின்ற தெய்வங்களின் ஆடை, ஆபரணம், ஆசனம் யாவுமே தெய்வீகப்பொருள் கொண்டவைதான்.

பக்தியை நெஞ்சமெல்லாம் நிறைத்துவிடும் அர்த்தங்களைச் சொல்பவை.

உலகத் தாயாகிய அம்மனின் மஞ்சம் இருக்கிறதல்லவா, இது நான்கு கால்களைக்கொண்டிருக்கிறது. ஒரு கால் பிரம்ம சொரூபம், இரண்டாவது கால் விஷ்ணு சொரூபம். அடுத்தது ருத்ர சொரூபமாகவும், நான்காவது ஈஸ்வர சொரூபமாகவும் விளங்குகிறது. இவை நான்கிற்கும் மேலே வைக்கப்பட்டிருக்கும் ஆசனம் சதாசிவ சொரூபம். இப்படியான சுகாசனத்தின் மேலே அமர்ந்துகொண்டு அருள் தருகிறாள் அன்னை.

சிகப்புக்குள்ளேயே நல்ல சிகப்பான தேககாந்தி அம்பாளின் வர்ணம். இந்த மகாசக்தியானவள் பஞ்ச கிருத்தியங்களுக்கும் ஆதிமூலமாக இருக்கிறாள். காரிய சித்திகளை பிள்ளைகளாகிய நமக்கு அள்ளித்தந்துவிட்டு, ஆனந்தமாக வீற்றிருப்பாள் இந்த மஞ்சத்தில்!




## வெற்றிலை பாக்கு

சுவாமிக்கு வெற்றிலை பாக்கு வைத்து வணங்குவது நமது முறை.

வெற்றிலையின் நுனியில் லட்சுமியும், நடுவில் சரஸ்வதியும், காம்பில் பார்வதியும் இருப்பதாக சாஸ்திரம் கூறுகிறது. இறைவனுக்கு எத்தனை பதார்த்தங்கள் படைத்தாலும் வெற்றிலை, பாக்கு வைக்காவிட்டால் அந்த நிவேதனம் முழுமையாகாது .



## கோயிலில்..

ஆலயத்தில் மூலவருக்கோ, ஏனைய சுவாமிகளுக்கோ அபிஷேகம் நடக்கின்ற வேளையில் உட்பிரகாரத்தை வலம் வருதல் சிறப்பல்ல.

அட்டமி, நவமி, அமாவாசை, பௌர்ணமி,மாதப்பிறப்பு, சோமவாரம், சதுர்த்தி ஆகிய நாட்களில் வில்வம் இலையைப் பறிக்கக்கூடாது.

அங்கவஸ்திரம், சால்வை போன்ற மேல்துண்டுகளை தோளில் போட்டிருக்கக்கூடாது. அவைகளை இடுப்பில் கட்டிக்கொள்ள வேண்டும்.

கொடிமரம், நந்தி, பலிபீடம், கோபுரம் ஆகியவற்றின் நிழல்களை கூடிய அளவு மிதிப்பதைத் தவிர்க்கவும்.


நந்திக்குக் குறுக்கேயும், பிரகாரத்தை வலம் இடமாகவும் சுற்றிச்செல்லல் ஆகாது.

ஆலயத்தில் வீண்பேச்சுக்களும், கவனங்களும் தவிர்ப்பது நல்லது.

ஆலயத்துள் உறங்குவது, கூச்சலிடுவது, வீடு திரும்பியவுடன் கால்கள் கழுவுவது அபத்தமாகும்.

# நலந்தரும் நாட்களும், விரதங்களும்





## ஆடி மாதத்தில்........

01-08-2012 - புதன்கிழமை
பூரணை விரதம்,
பட்டினத்தார் குருபூசை

05-08-2012 - ஞாயிற்றுக்கிழமை
சங்கடஹரகணபதி விரதம்

07-08-2012-செவ்வாய்க்கிழமை
நான்காம் ஆடிச்செவ்வாய்

10-08-2012- வெள்ளிக்கிழமை
கார்த்திகை விரதம்

15-08-2012 - புதன்கிழமை
பிரதோஷ விரதம்

16-08-2012 - வியாழக்கிழமை
நல்லூர் கந்தசாமி தேர்



## ஆவணி மாதத்தில்......

**17.08.2012 - வெள்ளிக்கிழமை**
அமாவாசை விரதம், நல்லூர் கந்தசுவாமி தீர்த்தம்

**21.08.2012 - செவ்வாய்க்கிழமை**
சதுர்த்தி விரதம்

**23.08.2012 - வியாழக்கிழமை**
ஷஷ்டி விரதம்

**25.08.2012 - சனிக்கிழமை**
அட்டமி - நவமி

**26.08.2012 - ஞாயிற்றுக்கிழமை**
ஆவணி மூலம், குங்குலியக்கலயர் குருபூஜை

**27.08.2012 - திங்கட்கிழமை**
ஏகாதசி விரதம்

29.08.2012 - புதன்கிழமை
பிரதோஷ விரதம், ஆவணி ஓணம்

**30.08.2012 - வியாழக்கிழமை**
நடேசரபிஷேகம்



31.08.2012 - வெள்ளிக்கிழமை
பூரணை விரதம்

**02.09.2012 - வெள்ளிக்கிழமை**
மூன்றாம் ஆவணி ஞாயிறு

**04.09.2012 - செவ்வாய்க்கிழமை**
சங்கடஹர சதுர்த்தி விரதம்

**06.09.2012 - வியாழக்கிழமை**
கார்த்திகை விரதம்

**07.09.2012 - வெள்ளிக்கிழமை**
ஸ்ரீ கிருஷ்ணஜெயந்தி

**08.09.2012 - சனிக்கிழமை**
அட்டமி - நவமி

**09.09.2012 - வெள்ளிக்கிழமை**
நான்காம் ஆவணி ஞாயிறு

**12.09.2012 - புதன்கிழமை**
ஏகாதசி விரதம், நீலகண்ட சிவாச்சாரியார் குருபூஜை

**13.09.2012 - வியாழக்கிழமை**
பிரதோஷ விரதம்

**15.09.2012 - சனிக்கிழமை**
அமாவாசை விரதம்

**16.09.2012 - ஞாயிற்றுக்கிழமை**
ஐந்தாம் ஆவணி ஞாயிறு

## சிறந்த சிவபக்தனாகிய ராவணன், ராமருடன் நடத்திய போரில் ஏன் தோற்றான்! சிவபிரான் ஏன் தன் பக்தனை காக்கவில்லை?



# சிவபக்தனுக்கு சிவ அபராதம்!!

### ஏனெனில், சிவபிரான் அவனுக்கு இதை அபராதமாக விதித்து வைத்திருந்தார் ..

ஜடாயுவோடு ஏற்பட்ட சண்டையில் ராவணன் சொன்ன பொய் அவனது சிவபக்தியை பாதித்துவிட்டதை அவனே அறிந்திருக்கவில்லை ..

சீதையை கவர்ந்துகொண்டு ஆகாய மார்க்கமாக பறந்த அவனது புஷ்பக விமானத்தை வழிமறித்தார் ஜடாயு. கழுகரசன் ஜடாயுவுக்கு ஏற்கனவே தசரத மன்னனுடன் நட்பு இருந்தது. சீதையோ தசரத ராமனின் மனைவி. விடுவாரா ஜடாயு?

''இந்த உத்தமியை விட்டுவிடு .. இல்லையேல் எனது தாக்குதலால் சிதறிவிடுவாய் ..'' என்று எச்சரித்தார்.

ராவணன் குணம்தான் தெரியுமே! பலமாக நகைத்தபடி வாளை உருவியவாறு விமானத்திருந்து இறங்கினான்.

இருவரும் கடுமையாக மோதினார்கள். கானகம் அதிர்ந்து பறவைகளும், மிருகங்களும் அஞ்சி நின்றன. ஆபத்பாந்தவனாக வந்து, உயிரைத் துச்சமெனக் கருதிப் போரிடும் ஜடாயுவுக்காக வேண்டியபடி நின்றாள் சீதை.



சாதாரண பறவையாக எடைபோட்டிருந்த ஜடாயுவின் வீரத்தை சிறிதும் எதிர்பார்த்திராத இலங்கேஸ்வரன் தடுமாறினான். ஜடாயுவின் கூறிய மூக்கும், நகங்களும் அவனது மேனியை இரத்தமயமாக்கின. ஆயுதங்களும் கைநழுவவே, ஒரு முடிவுக்கு வந்தான் ராவணன்.

''பட்சி ராஜாவே, உன் வீரத்தை மெச்சுகிறேன். ஆயினும், நம் யுத்தம் ஒரு முடிவுக்கு வரவேண்டுமல்லவா? நேராக நாம் நமது உயிர்நிலைகளை நோக்கியே போரிடுவோம். ஆதலால், உன்உயிர் எதில் தங்கி இருக்கிறதென்று கூறு ..'' என்றான்.

பட்சி அரசனுக்கும் அது சரியெனப்பட்டது. ''பட்சிகளாகிய எங்களுக்கு இறக்கையில்தான் உயிர்நிலை இருக்கிறது ..'' என்று கூறியதும்,

''ஓ, அப்படியா ..நல்லது. எனது உயிர்நிலை என்னுடைய தலைகளில் உள்ளது.'' என்று கூறினான் ராவணன்.

இங்குதான் ராவணன் சிவகுற்றம் செய்தான். ஏனெனில், உண்மையில் அவனது உயிர்நிலை அமிர்தகலசம் என்ற அவனது நெஞ்சத்தடத்தில் இருந்தது. ஜடாயுவை முறியடிப்பதற்காக வேண்டுமென்றே அப்படி பொய்யுரைத்தான்.


உடனே ஜடாயு அவனது தலைகளைக் குறிவைத்து தனது தாக்குதலை நடத்தியது. தனது கூறிய மூக்காலும், நகங்களாலும் சீற்றத்துடன் வீரமாகப் போரிட்டது. அதன் கவனத்தை தனது தலைகைளை நோக்கித் திசை திருப்பிவிட்டு, வேகமாக செயலில் இறங்கினான் ராவணன். சிவபெருமான் கொடுத்த 'சந்திரஹாசம்' என்ற வெற்றி வாளை எடுத்து ஜடாயுவின் இறக்கைகளை வெட்டிச்சாய்த்தான்.

எதிர்பாராத இத்தாக்குதலால் படுகாயமடைந்த ஜடாயு நிலத்தில் வீழ்ந்து துடித்த நிலையில், சீதையுடன் தனது வான் பயணத்தை தொடர்ந்தான் ராவணன்.

இதிலிருந்து உருவானதே ராவணனின் சிவக்குற்றம். போரில் வெல்வதற்காக அவன் பொய் கூறினான். ஜடாயுவோ உண்மையை உரைத்து உயிரைவிட்டது.

இக்காட்சியை புள்ளிருக்கு வேளூர் பதிகத்தில் திருஞான சம்பந்தர் இப்படிக் குறிப்பிடுவார்.

''பொய் சொல்லாதுயிர்
துறந்தாய் புள்ளிருக்கு
வேளூரே''



அதோடு, ஜடாயு ஒரு சிவ பக்தர். தினமும் நூறு யோசனை தூரம் பறந்துசென்று, கடற்கரை அடைந்து அங்கே கடல் மணலால் சிவலிங்கம் செய்து, சிவபெருமானை அர்ச்சித்து சிவஞான போத சூத்திரங்களை ஓதி வழிபடுவது அவரின் வழக்கமாகும்.

இப்படிப்பட்ட சிறந்த சிவபக்தனிடம் தன் உயிர்நிலை பற்றி பொய் கூறியது, ஏமாற்றி வஞ்சித்தது, அவரைக் கொல்வதற்காக சிவன் தந்த வாளையே பயன்படுத்தியது ஆகிய மூன்று குற்றங்களை சிவபிரானுக்கெதிராக ராவணன் செய்தான். அதற்கான சிவ அபராதங்களை அவன் ஏற்கவேண்டிய நிலையிலேயே போர்க்களத்தில் ஈசன் அவனிடமிருந்து விலகியிருந்தார். ராமரின் பாணத்தால் அவன் உயிர் துறந்தான்.





**இந்து மதம் உலகம் முழுவதும் பரவாமைக்கு என்ன காரணம்?**

இந்து மதம் மற்ற மதத்தினரை மாற்றம் செய்வதில்லை. அதில் நம்பிக்கை வைப்பதுமில்லை. எல்லா சமுகமும் கடவுளை நோக்கிச் செல்பவைதான் என்று இந்துமதம் நம்புகிறது. மதங்களும்கூட தெய்வத்தை நாடும் வழிதான் என்று இந்து மதம் நினைப்பதால் அதற்கு மதமாற்றம் தேவையில்லை. ஆனால் இந்து தத்துவம் உலகம் முழுவதும் பல வகையிலும் ஊடுருவி இருக்கிறது என்பதே உண்மை. இந்து மதம்தான் எல்லா மதங்களுக்கும் தாய் என்பார் விவேகானந்தர்.





**யார் என்று அடையாளம் தெரியாமல் லட்சக்கணக்கில் பணம் உண்டியலில் போடப்படுகிறதே! இது சரியா?**

சரியே! போடுபவருக்கும், கடவுளுக்கும் தெரிந்தால் போதும்தானே!



**துன்பங்களை சமாளிக்கும் ஒரு கருவியாக ஆன்மீகத்தை பயன்படுத்துவது நியாயமா?**

அநேகருக்கு கடவுளின் ஈடுபாடு முதலில் அப்படித்தான் தொடங்கும்




**ஆலயங்களில் உள்ள சிலைகளுக்கு பாலாலயம் செய்து, சிலைகளை எடுத்து வேறிடத்தில் வைத்துவிட்டு, கோவிலை தகர்த்து புனருத்தாரணம் செய்கிறார்களே! பாலாலயம் என்றால் பாலாபிஷேகமா?**

பாலாலயம் என்றால் பால ஆலயம் (இளம் கோயில்) என்று அர்த்தம். பால் அபிஷேகம் அல்ல. புனருத்தாரணம் செய்கின்ற சமயத்தில் மூர்த்திகளை இந்த பாலாலயத்தில் ஆவாஹனம் செய்து வணங்குவார்கள்.

### சரவணப் பெருமான்





# சங்கதிகள்

அகரம், உகரம், மகரம் என்ற மூன்றும் சேர்ந்ததே பிரணவ மந்திரமான **ஓம்.** முருகக்கடவுள் இந்த பிரணவத்தின் வடிவமாவார் ..

'**மு**' என்னும் எழுத்து முகுந்தனையும், 'ரு' என்னும் எழுத்து ருத்திரனையும், '**க**' எழுத்து பிரம்மனையும் குறித்து நிற்கிறது. இதனால் முருகன் என்ற திருநாமத்தை சொல்லி வழிபடும்போது மும்மூர்த்திகளையும் வணங்கிய பலன்
கிடைக்கிறது ..

**ஆ**று பருவ காலங்களை குறிப்பிட்டு காட்சி தருவது முருகனின் ஆறு திருமுகங்களாகும். பன்னிரண்டு மாதங்களைக் குறிப்பிடுவது அவனின் பன்னிரண்டு திருக்கரங்களாகும் ..

**மு**ருகப்பெருமானின் மயில் பறவையை 'சுத்த மாயை' என்றும், அதன் வாயில் இருக்கின்ற பாம்பை 'அசுத்த மாயை' என்றும், மயிலின் கால்களில் உள்ள பாம்பை 'பிரக்ருதி மாயை' என்றும் ஞான நூல்கள் குறிப்பிடுகின்றன ..

**மு**ருகனின் திருக்கரங்களில் தவழும் ஈட்டி, கோடரி, கத்தி, வில், பாசம், அங்குசம், கொடி, வஜ்ரம், பாணம், மணி, தாமரை ஆகிய பதினொன்றும் ஏகாதச ருத்ரர்கள் என்றும் ஞான நூல்கள் விவரிக்கின்றன ..

**கி**ழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, ஆகாயம், பாதாளம் ஆகிய ஆறு திசைகளில் இருந்தும் வருகின்ற பக்தர்களின் குறைகளை நிவர்த்தி செய்யவே ஆறு திருமுகங்களோடு எதிர்கொண்டு முருகப்பெருமான் அருள்வதாக புராணங்கள் கூறுகின்றன ..



# ஆஞ்ச நேயரை வணங்கும்போது..



'அன்னகை மோதிரத்தை அளித்தலும்
மணியைத் தந்து இந் நெடும்
கடலை நீயும் எங்கனம் கடந்தாய்,
என்ன உன்னத நெடிய மாலாய்
உயர்ந்தெழுந் தடங்கி நின்று
மன்னுத்தாய் ஆசி பெற்ற
மாருதி பாதம் போற்றி!

(ஆயுள் விருத்தி தரும் தரிசனம் இது.)

## வெற்றிலை மாலை சாத்தும்போது சொல்லவேண்டிய மந்திரம் ..

சொல்லும் பெற்றசோர்வலிலா தூய
வீரன் வல்லவன் ராமன் சிதை
வாயுரை பெற்ற அன்பன் அல்லலைப்
போக்கிக் காக்கும் அனுமனைப் பாடும் காலை
கல்வினைப் பெண்ணாய் செய்தாள்
கழவினைப் போற்றுவோமே!

## சனிதோஷம் அகல ..




ஸ்ரீராமதூத மஹாதீர
ருத்ரவீர்ய சமுத்பவ
அஞ்சனா கர்ப்ப சம்பூதம்
வாயுபுத்ர நமோஸ்துதே !!

சனிபகவானின் தொந்தரவுகளிலிருந்து தப்பிக்க இந்த ஸ்தோத்திரம் கைகொடுக்கும். சனிக்கிரகத்தின் பாதிப்புகள் ஜாதகத்தில் இருந்தாலும், அனுமன் பக்தர்களைக் காக்கிறது இது. சனிக்கிழமைகளில் துளசிமாலை சாற்றி, வாயு மைந்தனை இப்பாடலால் அர்ச்சித்து வர, அத்தனை சனிதோஷங்களும் அகன்றே வழிவிடும். .. வெற்றிகள் குவியும்! வளங்கள் வந்தே சேரும்!!

# பிதுர் தர்ப்பண பலன்கள்!

## கைகொடுக்கும் தகவல்கள்!






## மகாளய அமைவாசை!

நம் முன்னோர்களில் யாருக்கேனும் ஈமக்கடன்கள் தவறிப்போயிருந்தால் பாதிப்பு வருமே, குடும்பத்தில் குறைகள் நிலவுமே என்ற பயம் பொதுவாக எல்லோருக்கும் இருப்பதுண்டு. திகதிகள், திதிகள் என்ற விபரம் தெரியாமலிருப்பதும் ஒரு காரணம். ஆனால் இக் குறையை தீர்த்து, எண்ணிச்செய்கின்ற பிதுர்க்கடனை ஈடேற்றித் தருகிறது, இந்த **மகாளய அமாவாசை!**

புரட்டாசி மாதத்தின் அமாவாசையை குறிப்பதே மகாளய அமாவாசை. மகாளய பட்சத்தில் இது வருகிறது. **'மறந்தவர்களுக்கு மாளம்'** என்பார்கள். மறைந்துபோன முன்னோர்களை நினைத்து பக்திசிரத்தையோடு இதனை இந்துக்கள் கொண்டாடுவார்கள். இந்நாளில் பித்ருக்களை நினைத்துவேண்டி, கோயிலில் குருக்களுக்கு அரிசியும், வாழைக்காயும் தந்து பணிவதும் ஐதீகம். இதனால



தவறிப்போன பிதுர்க்கடன் நிறைவேறுகிறது.

மகாளய பட்சத்தின் தொடக்கத்தில் பூமிக்கு வந்து தங்கும் பித்ருக்கள் மகாளய பட்ச முடிவில் அமாவாசையன்று திலதர்ப்பணம் பெற்றுக்கொண்டு, மீண்டும் மேலுலகம் திரும்புகிறார்கள் என்பதும் ஐதீகம்.

அமாவாசை என்பதே பித்ருக்களை குளிர்விக்கவென்று ஏற்பட்ட தினம். இந்த நாளில் நீத்தார்க்கு எள்ளும், தண்ணீரும் இரைத்தால் நம் சந்ததிகளையும் இச்செயல் நிச்சயம் காப்பாற்றும் ..

### இன்னொரு விஷேமும் இருக்கிறது! ..

நவராத்திரி கொலுவின் ஆரம்பமும் இதே மகாளய அமாவாசையில்தான். இந்நாளில்தான் பூஜையறையில் படிகளை அமைத்து, பொம்மைகளை அடுக்கி, வீட்டுக்கு வரும் பெண்களுக்கு மஞ்சள், குங்குமம், தாம்பூழம் முதலியவை கொடுப்பர். இக்காரியம் வாழ்வில் சுபீட்சம் தரவல்லது.



திதியும், திகதியும் தெரியவில்லையே .. என் அம்மம்மாவுக்கு எப்படி பிதுர்க்கடன் செய்வேன் இறைவா..!





## ஆச்சார்ய அபிஷேகம்



வந்தனைக்குரிய, **பிரம்மஸ்ரீ தர்மகுமார சர்மா அவர்கள** ஆச்சார்ய அபிஷேகம் செய்யப்பட்டு, குருக்கள் நிலைக்கு உயர்வடைந்தார் .. பக்தி சொட்ட நிகழ்ந்தேறிய இந்நிகழ்வு *15-07-2012* அன்று ஞாயிற்றுக்கிழமை காலையில் இடம்பெற்றது. **சிவஸ்ரீ மகாதேவ ஐயர், ஸ்ரீ ராஜாம்பாள்** தம்பதிகளின் புதல்வராகிய இவர், பேசாலை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் பிரதம குருவாக திகழ்கின்றார். அத்துடன் வங்காலைப்பாடு ஸ்ரீ முத்துமாரியம்மன், காட்டாஸ்பத்திரி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆகிய ஆலயங்களிலும் விஷேட உற்சவங்களையும், கிருத்தியங்களையும் ஏற்று செவ்வனே நடத்தி வருபவராக இருக்கிறார்.

**பிரம்மஸ்ரீ** நிலையில் நேர்த்தியான ஐதீக சேவைகளை அளித்துவந்த தனது முருகப்பெருமானின் திருத்தலத்திலேயே, ஆச்சார்ய அபிஷேகமும் ஏற்று **சிவஸ்ரீ**யாக உயரும் பேறும் பெற்றார்.

தீட்ஷா குருவாக இருந்து சிவஸ்ரீ நா. நடராஜக்குருக்கள் அவர்கள் இவருக்கு நிர்வான தீட்ஷை செய்து அபிஷேக நிகழ்வை ஈடேற்றினார். பெருமளவில் பக்தர்களும், பொதுமக்களும், அதிகாரிகளும், பிரமுகர்களும் இந்த ஆசார நிகழ்வில் ஆர்வத்தோடு கலந்துகொண்டார்கள்.

அனுட்டான கடமைகளை சிரமேற்கொண்டு ஆலயப்பணிகள் புரிந்து வரும் இவர் சமூகம், சிரமதானம், இலக்கியம், மொழிப்பற்று ஆகிய துறைகளிலும் அளவற்ற சேவைகளைப் புரிந்து வருவதால், மன்னார் மக்களின் பெரும் மதிப்பிற்கும், பிரியத்திற்கும் உரியவாக விளங்குகிறார்!






## சுவாமி விவேகானந்தரின் 150 வது ஜனன தின விழா ஏற்பாடுகள் ..



நாடெங்கும் நடைபெற்று வருகின்ற சுவாமிஜியின் ஜனன தின நிகழ்ச்சிகள் மன்னாரிலும் வெகுசிறப்பாக இடம் பெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டங்கள்தோறும் சுவாமிஜியின் விழிப் பூட்டும் கருத்து க்களும், இந்து சமய மேன்மைகளும் முக்கிய நிகழ்ச்சிகளாக நடாத்தப்படுகின்ற அதேசமயத்தில், மன்னாரிலும் இதற்கான முக்கிய விழாக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிராம மட்டங்களிலும், நகர மட்டத்திலும் கிரமமாக நிகழ்வுகளை நடத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்றும் சமீபத்தில் இடம்பெற்றது.

மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசியக் கல்லூரியில் கடந்த 15.07.2012 அன்று விழாக் குழுவினர்கள் அனைவரும் அழைக்கப்பட்டு, கூட்டம் நடாத்தப்பட்டது. இருபதிற்கும் மேற்பட்ட கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கே பிரதிநிதிகளும் தெரிவானார்கள். நந்திக்கொடிகள், வாழை தோரணங்கள் சகிதம் அலங்கரிக்கப்படும் வீதிகள் முதலாக, இந்துக்களின் உள்ளத்தில் பேரொளியை தரவல்ல சமய, கலை நிகழ்ச்சிகள்வரை விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த திரு. ராதாகிருஷ்ணன் அவர்களின் பிரசன்னத்தோடு திருவாளர்கள். திருநாவுக்கரசு, தயானந்தராஜா, பிருந்தாவனநாதன், ராமகிருஷ்ணன், நடேசன், சூரியகுமார் ஆகியோருடன் பல முக்கியஸ்தர்களும் விழா ஒழுங்குகளை சீரமைக்க, பெருமளவில் அன்பர்கள் ஒத்துழைப்பு வழங்கினர் ..



# அவதார மகான்கள்... நம் பாக்கியமன்றோ!

'துறவிக்கு சொந்தமாவது, பந்தமாவது .. ' என்ற தத்துவத்தால் உலகத்தையே பக்குவப்படுத்திய பட்டினத்தடிகளின் துணிச்சல் யாருக்கு வரும்? ..

இவ்வளவுக்கும் இவர் பெரும் செல்வந்தர்! ஆடம்பரமாக வாழ்ந்தவர். வறுமை இவர் இருக்கும் இடத்தைக்கூட எட்டிப்பார்க்காது. அப்படியிருக்க எல்லாவற்றையும் வெறுத்தாரே! ஏன்? ..

வழக்கம்போலவே பெரும் பொருளை ஈட்டுகின்ற நாள் அது ..

திரைகடல் ஓடிச்சென்ற மகன் மருதவாணன் கப்பல் கப்பலாய் திரவியம் கொண்டுவரப்போகிறான் என்று கரையில் ஆவலோடு காத்திருந்தார் திருவெண்காடர்.

கப்பல் வந்துநின்று மருதவாணனும் பொதிகளோடு இறங்கினான். ஆவலோடு நெருங்கிப்பார்த்த திருவெண்காடர் அதிர்ச்சி அடைந்தார். அத்தனை மூட்டைகளிலும் இருந்தது தவிடும், எருவும் என்றால் அதிராமல் என்ன செய்வார்!

துக்கத்துடன் மகனைப்பார்த்தார். ஆத்திரமும் சேர்ந்துகொள்ளவே **''என்ன இது ..? ''** என்று அதட்டினார்.

**''அவிழ்த்துப் பாருங்களேன் ..''** என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு, அவ்விடத்தை விட்டகன்றான் மகன்.

ஒரு விஷயம். மருதவாணன் திருவெண்காடரின் சொந்த மகன் அல்ல. வளர்ப்பு மகன். அதனால்தான் இப்படி கப்பல் முழுவதும் வரட்டியையும், தவிட்டையும் அள்ளிக்கொண்டு வந்திருக்கிறான் என்று நினைத்த திருவெண்காடர் ஆத்திரமேலீட்டால் ஒரு வரட்டியை எடுத்து தரையில் ஓங்கி அடித்தார்.

என்ன அதிசயம்! அத்தனையும் இரத்தினங்களாக தெறித்துச்சிதறின. திகைத்த நிலையில் அடுத்ததையும் தரைமீது அடித்தார். அதிலும் இரத்தினங்கள்! இப்படியே அத்தனை வரட்டியிலும், தவிட்டு மூட்டையிலும் பொன் துகள்கள் நாற்புறமும் பரவி கண்ணைப்பறித்தன.

பரம்பரை வணிகக் குலத்தின் பெருமையை காப்பாற்றிவிட்டான் மகன் என்ற மகிழ்ச்சி கரைபுரண்டோட, மகனைக் கட்டித்தழுவுவதற்காக வீட்டை நோக்கி ஓடினார் திருவெண்காடர்.

அங்கே மகன் இல்லை. தனது மனைவியார் நீட்டிய ஒரு சீட்டை வாங்கிப் படித்தார். அதில்,

**'காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே ..'** என்று எழுதப்பட்டிருந்தது. அப்படி எழுதிக்கொடுத்துவிட்டு மருதவாணன் எங்கோ சென்று மறைந்துவிட்டான்.

அதிர்ந்தே போனார் திருவெண்காடர். இதுநாள்வரை அறியாத புதிய கருத்து! மேலெல்லாம் சுரீரென்ற தாக்கம், விழித்துக்கொண்ட நிலை!

உண்மைதானே, 'போகும்போது எதைக்கொண்டு போகப்போகிறோம்? உயிரானது உடலைவிட்டு நீங்கும்போதுகூட சட்டெனு செல்கிறதே! இதுவரை குடியிருந்த உடலை அப்படியே விட்டுவிட்டுப் போகின்ற, அது வேறு எதைத்தான் கொண்டுபோகப்போகிறது ..?'

அக்கணமே மாற்றத்தை உணர்ந்தார் திருவெண்காடர்.




**கழுமரம் எரிந்தது! வரட்டியில் ,ரத்தினங்கள்!! பச்சை வாழைமரத்தில் சிதை மூட்டல்!!!**

ஆசைகளும், பற்றுகளும் திடீரென விலகின. பந்த பாசங்கள் எங்கோ காணாமல் போயின. விரும்பிய அனைத்தும் தம்மைவிட்டு விலகிச்செல்வதாக அறிந்தவர் அப்படியே விக்கித்து நின்றார்.

ஆடைகளும், அணிமணிகளும் உடம்பிலிருந்து கழன்று விழுந்தன. கோவணம் மட்டுமே அணிந்தார். மனைவி, உற்றார், உறவினர், நிலபுலன், திரவியம் அத்தனையும் துறந்து வீட்டைவிட்டே வெளியேறினார்.

காடும், மலையும் வாழ்விடமாயின. வீதியும், தெருக்களும் பிரியமாய் தெரிந்தன. நிரந்தரமற்ற உலக வாழ்வில் ஆசாபாசங்களில் சிக்கி அலைமோதும் மானிடரில் வெறுப்புற்றார். அவரது உள்ளம் தனிமையை நாடியது.

அப்படியும் உலகம் விடவில்லை அவரை. அவரது ஒரே அக்கா ஒருநாள் அவரை விஷம் வைத்துக் கொல்லப்பார்த்தாள்.



# பட்டினத்தார்

துறவியாகப்போனாலும் ஆஸ்தியை நாடி வந்துவிடுவானோ என்று பயந்தாள். பலகாரத்தில் நஞ்சு கலந்து அவருக்கு கொடுத்தனுப்பினாள்.

அவர் பழைய திருவெண்காடர் அல்லவே! இப்போது பட்டினத்தார் அல்லவா .., பட்க்ஷணத்தில் இருந்த சூட்சுமத்தை அறிந்துகொண்டார். அதனை **''தன் வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும்''** என்று கூறி, தமக்கையாரின் வீட்டுக் கூரையின்மீது வீசியெறிந்தார். கூரை தீப்பற்றி எறிந்து வீடும் சாம்பலானது. இனி தனக்கும் சொத்துகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்பதை இதன்மூலம் நிருபித்துவிட்டு இன்னும் அதிக 'தூரத்தை' நாடிப் புறப்பட்டுவிட்டார். காலமும் கடந்தது.

ஒரு கானகத்தில் விநாயகர் கோயிலில் தங்கி தவ நிலையில் அவர் இருந்தபோது, ஒரு முத்துமாலை அவரின் கழுத்தில் வந்து விழுந்தது. அன்று பத்ரகிரி மன்னனின் அரண்மனையில் அணிகலன்களைத் திருடிய கள்வர்கள் அவ்வழியால் தப்பிச்சென்ற வேளையில், தமது வெற்றிக்குக் காணிக்கையாக அந்த மாலையை பிள்ளையாருக்கென போட்டதே அது. சிறிது நேரத்தில் கள்வரைத் துரத்தி வந்த காவலர்கள் பட்டினத்தாரின் கழுத்தில் கிடந்த மாலையைப் பார்த்துவிட்டு அவரை அரசனிடம் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அரசனும் அவரைக் கழுவில் ஏற்றுமாறு மரண தண்டனை விதித்தான்.

மனம் வருந்திய அடிகள்

**'' என் செயலாவது யாதொன்றுமில்லை, இனித் தெய்வமே ..''** எனும் பாடலைப்பாட, கழுமரம் தீப்பற்றி எறிந்தது. இதைக்கண்ட மன்னன் பெருந்துயருடன் பணிந்து அவரிடம் மன்னிப்புக் கோரினான். அதுமட்டுமல்ல, அன்றே பட்டினத்தாரின் சீடராகி தனது அரசுரிமையைத் துறந்து அவர் பின்னால் திருவோடு ஏந்திக்கொண்டு புறப்பட்டு விட்டான்.

பின்னாளில் இந்த அரசன் 'பத்திரகிரியார்' என்று போற்றப்பட்டு, பட்டினத்தாரின் காவியத்தில் இடம்பெற்றார்.

பெரும் செல்வந்தராகிய திருவெண்காடர் ஆண்டியாகி அலையும் நிலையை ஏன் தேர்ந்தெடுத்தார் என்று புரியாமல் குழம்பினர் ஊரார். பட்டாடைகளும், மணி அணிகளும், பகட்டுமாகவே அவரைப் பார்ததுப் பழகியவர்களுக்கு கோவணம் உடுத்திப் பிச்சையேற்று வாழும் அவரைப் புரிந்துகொள்ள முடியவில்லை. 'திருவெண்காடர் துறவு பூண்டாரா!..' என்று அறிந்த அரசனொருவன் ஒருநாள் அவர் இருக்கும் காடு தேடி வந்தான். **''துறவு கொண்டதனால் நீர் அடைந்த உயர்வு என்ன? ''** என்று வினவினான்.

**''நீர் நிற்கவும் யான் இருக்கவும் பெற்ற உயர்வே அது''** என்று அமைதியாக மறுமொழி கூறினார். இந்த வார்த்தையின் பொருளை உணர்ந்த மன்னன் உலகையே உணர்ந்தவனான்.

திருவெண்காடரை திருவெண்காட்டு அடிகள் என்று மக்கள் மதிப்போடு அழைத்தார்கள்.

பல தலங்களையும், தீர்த்தங்களையும் தேடிச்சென்று வழிபட்டவாறே தொடர்ந்த அவரின் வரலாற்றில் எத்தனையோ அற்புதங்கள் நடந்தேறின. பல மகான்களும் அவரால் உருவாகினர்.

துறவு வாழ்வின் தூய்மைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த பட்டினத்தாரை ஒருமுறை பந்தம் என்ற உறவு சோதித்துப் பார்த்தது. அவரது தாயின் மரண நிகழ்வே அது.

தன்னைப் பெற்றெடுத்த தாயின்பொருட்டு, துறவு நிலையை அச்சமயம் விட்டுக்கொடுத்தார். எல்லாவற்றையும் அறுத்தெறிந்தாலும் பூவுலக வாழ்வை நீத்துச்செல்லும் அன்னைக்கு மகன் செய்யவேண்டிய இறுதிக்கடனை உணர்ந்தார்.

அப்படியும்கூட யார் உதவியும் பெறாமல், தானே **பச்சை வாழை மரங்களை அடுக்கி,** அதில் தாயை வைத்து சிதை மூட்டினார்!

பட்டினத்தார் சென்னை திருவொற்றியூர் கடற்கரை மணலில் உயிரோடு புதைந்து சமாதியாகி விட்டதாகவும், பிறகு சுயம்புலிங்கமாக வெளியில் வந்ததாகவும் கூறப்படுகிறது. ஜோதியாக இறைவனில் சங்கமித்ததாகவும் நம்பப்படுகிறது.

# திருவானைக்கூடத்தில் ராஜேஸ்வரி இருக்கிறாள், குறையேது ? ..



*ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள்! ..*
*அழகுறு தலத்தில், நிற்கின்ற திருக்கோலத்தில் பேரொளி சிந்தும் இந்த அம்மனை தரிசிப்பது சாதாரண அதிர்ஸ்டமல்ல ..*
*மன்னார் நகரின் உப்புக்குளம் கிராமம்*

என்றாலே, யாருடைய நினைவுக்கும் உடனே முதலில் வருவது இந்த தாயின் சந்நிதிதான். பிரம்மாண்டமான குளத்தில் தன் அழகை சரி பார்த்தவாறு கரையிலே அம்சம் பொங்க நிற்கின்ற தலத்திற்கு மட்டுமல்ல, நகரின் அத்தனை மக்களுக்குமே இந்த அம்பாள்தான் சொந்தக்காரி! அப்படிப்பட்ட காவல் தெய்வம் இது ..

அமைதியின் உறைவிடமாக விளங்கும் சூழலில் பன்னெடுங் காலமாக வாசம்புரிந்து வருகின்ற இந்த அன்னையின் அருள்நாடி வருபவர்களின் நம்பிக்கை வீண்போவதே இல்லை. குறிப்பாக தாய்க்குலங்களின் தவிப்பறிந்து சடுதியாய் உதவிடும் தயாளவதியாம் இந்த ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் தனித்தன்மையை கேட்போமா! ..

ஸ்ரீ ராஜராஜேஸ்வரியைப்பற்றிய எட்டு ஸ்லோகங்களும் அழியாச்செல்வம், அந்தஸ்து, புகழ், பதவி, நோயற்ற வாழ்வு, உயர் கல்வி ஆகியவற்றை அளிக்கவல்லதாகும். ஸ்ரீ ராஜராஜேஸ்வரி என்ற அஷ்டகத்தின் பொருள் -- எல்லா கடவுள்களுக்கும் ராணியானவள், சர்வ வல்லமை பொருந்தியவள், எல்லா இடங்களிலும் வியாபித்துள்ளவள். எட்டு ஸ்லோகங்களும் 'அம்பா' என்றே ஆரம்பிக்கின்றன. அம்பா என்றால் தாய், எல்லா உலகிற்கும் தாய். ஒவ்வொரு ஸ்லோகத்தின் கடைசி பாதம் பார்வதி தேவியை எல்லோருக்கும் மேம்பட்டவள், சேதாநாரூபி, சகல ஐஸ்வர்யம் படைத்தவள், தேவதைகளுக்கெல்லாம் ராஜ ராஜேஸ்வரி என்று கூறி முடிகிறது. எல்லா ஸ்லோகங்களும் ஆதி பராசக்தியின் பல அவதாரங்களையும் குறிப்பவையே ..

*இப்படிப்பட்ட தெய்வம் நமக்கு மிக அருகிலேயே! என்னே பாக்கியம்!.*

---

# விரதங்களால் நல்வாழ்வு! ..

## தெய்வீகப் பிரசங்கம்!



விரதங்களில் மிக அதிக பலனைத் தரக்கூடியதும், இறைவனது திருவருள் சக்தி கிடைக்க உதவுவதுமான விரதங்கள்.. ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தி விரதம், மாசிமாத மகா சிவராத்திரி விரதம், சனிப்பிரதோஷ விரதம், சித்திரா பௌர்ணமி சித்ரகுப்த விரதம், வைகாசி விசாக விரதம், ஆடிப்பூரம், ஆடிஅமாவாசை விரதம், ஆவணி கோகுலாஷ்டமி கிருஷ்ண ஜயந்தி விரதம், புரட்டாசிமாத மஹாயள பட்ச (இறந்த மூதாதையர்) அமாவாசை விரதம், கேதார கௌரி விரதம், ஐப்பசி ஸ்கந்த ஷஷ்டி விரதம், கார்த்திகை சோமவார விரதம், மார்கழி திருவாதிரை விரதம், மார்கழி சொர்க்க வாசல் வைகுந்த ஏகாதசி விரதம், தைப்பொங்கல் விரதம் ஆகியனவாகும். இதைவிட மாதந்தோரும் வரும் சதுர்த்தி விரதம், ஷஷ்டி, கார்த்திகை விரதம். பிரதோஷ விரதம், ஏகாதசி விரதம் ஆகியனவும் நமக்கு பாவங்களைப் போக்கி மோட்சத்தை அளிக்கக்கூடியவையாகும். இவ் விரதங்களை ஆண்கள், பெண்கள், பத்து வயதிற்கு மேற்பட்ட யாவரும் அனுஷ்டிக்கலாம். பெரியவர்களிடம் கேட்டு முறையாக அனுஷ்டிப்பது சிறப்பாகும்.

பெண்கள் அனுஷ்டிக்கும்போது திருமணமானவர் என்றால் கணவனிடமும், அல்லாதவர்கள் மாமனாரிடமும், அதுவும் அல்லாதவர்கள் மூத்த மகனிடமும் அனுமதி பெற்றே விரதம் ஆரம்பிக்கவேண்டும். திருமணமாகாதவர்கள் தன்னைப் பெற்ற தந்தையிடம் அல்லது மூத்த சகோதரனிடம் அனுமதி பெற்று விரதம் அனுஷ்டிக்க வேண்டும். எந்த விரதமானாலும் அதனை அதற்குறிய கால அளவுகளில் சரியாகக் கடைப்பிடித்து வழிபட்டுவர, எந்தக் குறையும் அணுகாமல் வாழலாம். விரதகால உணவுமுறைகளால் நம் உடலும், மனமும் அபமிரித மாற்றங்களை எட்டும்.

இதில் மாசிமாத அமாவாசை, சித்திரா பௌர்ணமி, ஆடி அமாவாசை, புரட்டாதி மகாளய பட்ச விரதம் ஆகியவை இறந்த நமது தாய் தந்தையர், மாமன் மாமி ஆகியோருக்கான பிதிர், மாதுர், விரதமாகும்.

பணிவான நன்றிகள் ..
**ஷண் ரவிச்சந்திர குருக்கள்,**
*(பிரதம குருவும், சோதிடரும்)*
*அம்மன் வீதி, திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்*

*இம்மாதம் தருபவர்,*
***ஷண் ரவிச்சந்திர குருக்கள்***

# மாதங்களை குறை சொல்லலாமா?..

நம் வைபவங்களை தள்ளி வைத்து, தெய்வங்களை வழிபடும் மாதங்கள் இவை!

ஆடி, புரட்டாதி, மார்கழி முதலிய மாதங்களை நற்காரியங்களிலிருந்து இந்துக்கள் தள்ளி வைப்பதால் அவை கூடாத மாதங்கள் என்று அர்த்தம் கொள்வோர் உண்டு. இது தவறு. இவற்றை 'பீடை' மாதங்கள் என்றும் வர்ணிப்பர். இவற்றின் அருமையை விளங்கத் தவறியமையே காரணம். இவை **'பீட மாதங்கள்'** என்றுதான் பெயர் பெற்றிருந்தன. அதுதான் மருவி 'பீடை மாதங்கள்' என்றாகிவிட்டன.

இம்மாதங்கள் தெய்வங்களுக்குறிய அதிவிஷேச மாதங்களாகும். அதில் மனிதர்களின் காரியங்களுக்கு இடமில்லை. ஆடிமாதத்தை எடுத்துக்கொண்டால் அதில் 'ஆடிப்பெருக்கு', 'ஆடிஅமாவாசை' என்று ஆடியைத் தழுவி பெருமளவில் வழிபாடுகள் இடம் பெறுகின்றன. இதோடு பல அம்மன்களுக்கும் திருவிழாக்கள், கொடை விழாக்கள் இடம்பெறுகின்றன. ஆடி மாதத்தில் இதுபோன்ற தெய்வ கிருத்தியங்கள் அநேகம்!






புரட்டாதி மாதத்தையும் எளிதாக குறைத்து மதிப்பிடுவார்கள். 'நல்ல மாதமல்ல, ஆளைப்போட்டு புரட்டும்..' என்பார்கள். ஆனால் புரட்டாதி மாதம் பெருமாளுக்குரிய மாதம். புரட்டாதி சனிக்கிழமைகளில் விஷ்ணு கோயிலுக்குச்சென்று வழிபடுவது அதிசிறப்பானது. சில பெருமாள் கோவில்களில் எண்ணைக்காப்பு உற்சவம்கூட இடம்பெறும்.

மார்கழி மாதத்தைப்போல அருமையான மாதத்தை காணமுடியாது. மங்கையர்களின் விரதங்களும், அவர்களின் மணவாழ்வு பிரார்த்தனைகளும் இடம்பெறும் மாதமாகும். ஆண்டாள் கண்ணனையே கணவனாக அடைய திருப்பாவை பாடித் தவமியற்றியதும், சிவன் கோவில்களில் மாணிக்கவாசகரின் திருவெம்பாவை பாடி பஜனை செய்வதும் இந்த மார்கழியில்தான். அதிகாலை வேளைகளில் குளித்து, ஆலயங்களுக்குச் சென்று பூஜைகளைக் காண்பதென்பது ஆனந்த அனுபவமாகும்.

இம்மாதங்களை மலைமாதங்கள் என்றும் குறை சொல்வர். அதுவும் தவறு. இவையெல்லாம் மறை மாதங்களென்று தர்மநெறி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. தெய்வத்தை வழிபட்டு, தெய்வீகத்தில் வாழும் புனித மாதங்கள் இவை. இம் மூன்று மாதங்களும் மனிதர்களுக்கு உரியவையே அல்ல. தெய்வங்களுக்கே உரியன.

எனவே, மனிதர்களாகிய நாம் நமது காரியங்களை இம் மாதத்தில் தள்ளிவைத்துவிட்டு, இறை வழிபாடுகளில் கவனம் செலுத்தினால் திருவருள் நிச்சயம் ..

# விநாயகர் சதுர்த்தி



## ஆவணி வந்ததே, ஆனந்தம் பொங்குதே!..

ஆவணி மாதம் வந்துவிட்டால் மனதில் ஒரு அமைதி ஏற்படுகிறது. பிணக்குகள் காணாமல்போய், இனம் புரியாத சமாதான உணர்வு மேலோங்கி நிற்கும். எதிரிகளைக் கண்டால்கூட திட்ட மனம் இடம்தராது. காரணம் ..

ஆவணி மாதத்தின் அற்புதமான காந்த சக்தி அது!

பெருமான் கணபதியும் இம்மாதத்தில் முக்கிய பங்கை வகிக்கிறார். அதிலும், ஆவணி என்றாலே விநாயகர் சதுர்த்திதான் யாருக்குமே நினைவுக்கு வரும்.

ஆவணி மாத சுக்கில பட்சத்தில் வருகின்ற சதுர்த்தி தினமானது சைவர்களுக்கு முக்கியமானதாக கருதப்படுவதும், அதில் பிள்ளையார் வழிபாடு நடைபெறுவதும் பாக்கியமான விஷயங்கள்!

தமிழ்நாட்டு தஞ்சை மாவட்டத்தில் 'கணபதி அக்ரஹாரம்' என்ற பெயரில் ஒரு கிராமமே இருக்கிறது. அங்குள்ள விஷேசம் என்னவென்றால், விநாயக சதுர்த்தியன்று ஊரில் உள்ள அனைவரும் பிள்ளையாரின் முன்னால் கூடிவிடுவார்களாம். அடுத்ததாக அவர்கள் செய்கின்ற காரியம் வியக்க வைக்கும். ஆம், தங்களிடையே இருக்கின்ற அத்தனை பிரச்சினைகள், சச்சரவுகளை அவர்கள் பேசித்தீர்க்கவேண்டும் என்பது வழக்கம். கணபதியின் முன்னிலையில் சமரசம் கண்டு, இதுவரை நிலவி வந்த குழப்பங்களை நீக்கி, எல்லோரும் ஒன்றாக ஆனைமுகனுக்கு பூஜைகள் செய்வர். அன்றைய தினத்தில் கிராமத்தில் எந்த வீட்டிலும் தனியாக விநாயகர் பூஜைகள் நடக்காது. இந்த சம்பிரதாயம் வெகு காலமாக பின்பற்றப்படுகிறது ..

***ஆவணித் திங்களில்***
***வந்தருள்வாய் ..***
***என்னை ஆண்டவனே ..***

காரியசித்திகளைப் பெறுவதும், பழிகளிலிருந்து விடுபடுவதும் இந்த ஆவணி மாதத்தில் சுலபமாக கைகூடுகிறது. அதற்கான அருமையான விரத, நோன்புகள் இதில் வருகின்றன. 'காந்தம்' போன்ற புராணங்களில் கூறப்பட்டுள்ள சித்தி விநாயக விரதம், சங்கடஹர சதுர்த்தி விரதம், தூர்வா கணபதி விரதம் மூன்றும் கூடிவருகின்ற மாதம் இதுவாகும். பகவான் ஸ்ரீகிருஷ்ணன் பிரசனசித்தைக் கொன்று, சியமந்தக மணியை திருடினார் என்ற பழிக்கு இலக்காகி இருந்தவர். இந்த விரதத்தை நோற்றதாலேயே அந்த பழியில் இருந்து விடுபட்டார்.

தலா இருபத்தியொரு அருகம்புற்களும், பூக்களும், 21 வகை இலைகளும் கொண்டு பூஜிக்கப்படுகின்ற களி மண்ணால் செய்யப்பட்ட திருவுருவம் அருளை அள்ளித்தரும். இந்த பிராணப் பிரதிஷ்டையில் இருபத்தியொரு கொழுக்கட்டைகளும் விநாயகருக்குப் படைக்கப்படும். இரவில் சந்திரனுக்கு பூஜையும், அருக்கியமும் கொடுப்பர்.

தருமருக்கு இதனை கிருஷ்ண பரமாத்மா உபதேசித்ததாக மகாபாரதம் கூறுகிறது. இதற்குரிய பூஜைகள் கிருஷ்ணபட்ச சதுர்த்தி தினத்தில் இரவில் சந்திரன் உதயமானதும் செய்வார்கள். ஆவணிமாத தேய்பிறைச் சதுர்த்தியும் இதற்கு உகந்ததாகையால், அன்றும் பூஜைகள் செய்து வரங்களைப் பெறுவர்.

தூர்வா கணபதி விரதம் வளர்பிறைச் சதுர்த்தியில் மூன்று அல்லது ஐந்து ஆண்டுகள் அனுஷ்டிக்கப்படும். ஆவணி, கார்த்திகை மாத சதுர்த்திகளும் சிறப்பானது. சந்ததிச் சிறப்பும், செல்வப்பெருக்கும் இதனால் கிடைக்கும்.



ஒருவரின் பாதுகாப்புத் தேவையை நிறைவேற்றுகிறது இந்த சங்கடஹர சதுர்த்தி விரதம்! சிறைவாசம், கடன், நோய், துன்பம், அலைச்சல் முதலிய அபாயங்களிலிருந்து தப்பிக்க இந்த விரதத்தை நோற்பார்கள். வனவாச காலத்தில்


## ஓணம் பண்டிகை

திருவோண நட்சத்திரம் ஆவணி மாதத்துப் பூரணையுடன் சேர்ந்து பெரும்பாலும் இந்த பண்டிகை நாளாக அமையும். இந்த நாள்தான் கர்நாடக மாநிலத்தவர்களுக்கு மிகச்சிறந்த நாள் என்பது உலகறிந்தது. இந்த ஓண விழாவின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. தேசமே இவர்களோடு சேர்ந்து கோண்டாடி மகிழும். சிறுபோக அறுவடை விழாவாகவும் இதனைப் போற்றி மகிழ்வார்கள்.

சைவர்கள் ஐப்பசி ஓணத்தில் இவ்விழாவைக் கொண்டாடுவர் என்று ஞானசம்பந்தப்பெருமான் திருவாய் மொழிந்திருக்கிறார் ..



## அற்புதமான ஆவணி மாதத்திலே ..




## நட்சத்திரச் சிறப்பு!

ஓண நட்சத்திரம் மகா விஷ்ணுவுக்குரிய விஷேட நட்சத்திரமாகும். ஆயினும், சைவர்களே பெரிதும் கொண்டாடியிருக் திருமால் மூன்றடி மண்கேட்டு மகாபலியை ஒடுக்கியபோது, அச்சக்கரவர்த்தி ஒரு வரம் கேட்டான். 'பிரபு, இந்த நாட்டையும், மக்களையும் ஆண்டுக்கொருமுறையேனும் நான் காணவேண்டுமே ..' என்று.

திருவோண நட்சத்திரத்தன்று மகாபலி வந்து தனது மக்களைப் பார்த்துச்செல்லுமாறு பெருமாளும் வரம் தந்தார். இதன்படி அந்தச் சக்கரவர்த்தியின் நினைவு நாளாகவும், அவர் மக்களைக் காணவரும் நாளாகவும் இவ்விழா நடைபெறுகிறது.

இந்நாட்களில் ஆண்களும், பெண்களும் கலந்துகொள்ளும் பலவிதமான நிகழ்ச்சிகளும், விளையாட்டுகளும் உள்ளத்தை கொள்ளை கொள்ளும். பொழுதுபோக்கும், உல்லாசமும் எங்கும் களைகட்டும். ஆண்களின் வீரவிளையாட்டுகள் பிரமிக்கவைக்கும். ஓணம் என்ற சொல்லுக்கு ஆறு என்றும் பொருளுண்டு. சேதுபுராணத்தில் ''கங்கையாதி ஓணநீர்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஓண நந்நாளில் மக்கள் புனித நீர்த்துறைகளில் நீராடி சிவபெருமானையோ, மகாவிஷ்ணுவையோ வழிபட்டார்கள். செல்வந்தர் முதல் ஏழைகள் வரை சகல மலையாளத்தவரும் குதூகலிக்கும் இந்த ஓண நாள்தான் மலையாள ஆண்டின் தொடக்க நாளாகவும் அமைகிறது.

# ஆவணி அவிட்டம்!

ஆவணியும், புரட்டாதியும் கார்காலத்தின் தொடக்கமாக இருக்கும். ஆவணி தொடங்கிவிட்டாலே குளிரை நினைத்து பயம் வரும். சில பிரதேசங்களில் வெளியேகூட செல்லமுடியாத அளவுக்கு குளிர் இருக்கும். இக் காலத்தையே தாம் கற்ற வேதங்களை மனனம் செய்யும் பகுதியாக வைத்திருந்தனர். சிரவணம் என்று சொல்லப்படும் இந்த கற்றல் துவக்கத்தை ஆவணி அவிட்டம் என்றும் அழைப்பர். துவக்கம் என்னும் பொருளுடைய 'உபகர்மம்' என்றும் இது குறிப்பிடப்படும். இந்திய பண்டைக்கால கல்வி முறையிலே இது ஒரு முக்கியமான அலகாகவும் இருந்திருக்கிறது. இந்த விழாவைத் தொடங்கும்போது வேதத்திற்கு ஆதாரமாகிய முனிவர்களின் பெயரைச்சொல்லி தர்ப்பணம் செய்வார்கள். கல்வித் தேவதைகளாகிய மேதை, சிரத்தை முதலியோரைத் துதித்து ஓமம் செய்வார்கள். பூணூலைப் புதுப்பிப்பார்கள்.

# ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

## அற்புதமான ஆவணி மாதத்திலே ..



பகவான் கிருஷ்ணர் பிறந்தது ஆவணி மாதத்தில். இம்மாதத்திலேயே கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடப்படுகிறது. ஓண நட்சத்திரத்திலேயே பரமாத்மா அவதரித்தார் என்பதும் நம்பிக்கை. அதனால்தான் ஓணத்திற்கும் சிறப்பு வந்தது.

திருமால் பிறந்த நாளை பெரியாழ்வார் ''நீ பிறந்த திருவோணம் ..'' என்று பாடுகிறார். கோகுலாஷ்டமிதான் கண்ணன் பிறந்த தினம் என்பதும் பலருடைய நம்பிக்கை. கிருஷ்ண பரமாத்மா மதுரையில் அஷ்டமியில் தோன்றி, உடனேயே கோகுலத்திற்குக் கொண்டுபோகப்பெற்று, அங்கே பிறந்தவன் போன்றே வளர்ந்ததாகவும், அதனாலேயே கோகுலாஷ்டமி என்று பெயர் வந்ததாகவும் கூறப்படுகிறது. அதைக் கொண்டாடவேண்டிய நாள் ஆவணி மாத கிருஷ்ண பட்ச அஷ்டமியாகும். அன்று ரோஹிணி நட்சத்திரமும் அனேகமாக இருக்குமாம். கண்ணன் நள்ளிரவில் தோன்றியதால் ஆவணி மாதத்தில் ரிஷப லக்கினத்தில் அஷ்டமி திதி இருக்கும் நாள்தான் கண்ணனின் பிறந்த நாளைக் கொண்டாட ஏற்றது.

திதியை முக்கியமாகக் கொண்டவர்கள் கோகுலாஷ்டமி ஜன்மாஷ்டமி என்றும், நட்சத்திரத்தை சிறப்பாக கொண்டவர்கள் ஸ்ரீ ஜயந்தி என்றும், ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி என்றும் அழைப்பர். இதனாலேயே கண்ணன் பிறந்த நாள் பலராலும் வெவ்வேறு நாட்களில் கொண்டாடப்பட்டு வருகிறது.

காலை முதல் விரதமிருந்து, நள்ளிரவில் இலக்கினம் வந்ததும் கண்ணனுக்கு வழிபாடு செய்து, அதன்பின்னர் உணவருந்தி, இரவு முழுவதும் கண்விழித்து பஜனை செய்து கொண்டாடவேண்டும். இவ்வாறு அனுஷ்டித்தால் அஸ்வமேத யாகம் செய்த அளவுக்கு பலன் கிடைக்குமாம்.

# ஆவணி மூலம்

குதிரை வாங்கச் சென்ற மணிவாசகப்பெருமானை சிவபெருமான் மானிட உருவில் குருமூர்த்தமாய் திருவடி தீட்சை வைத்து ஆட்கொண்டருளினார் என்கிறது புராணம். குதிரை வாங்க கொண்டுசென்ற பணத்தையெல்லாம் கோயில் திருப்பணிக்காக செலவு செய்துவிட்டார். பாண்டியன் தூதுவரை அனுப்பி, மணிவாசகரை அழைத்தபோது, சிவபெருமான் ஆவணிமாத மூல நட்சத்திரத்தில் குதிரைகள் வரும் என்று சொல்லி அனுப்பினார். அவ்வாறே, எம்பெருமான் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கி ஆவணி மூல நட்சத்திரத்தன்று மதுரை வீதியிலே கொண்டு வந்தருளினார். இத்தினத்தை இன்றும் மூலப்பெருவிழாவாக மதுரையிலே கொண்டாடுகின்றனர்.




மாணிக்கவாசகர்

## அற்புதமான ஆவணி மாதத்திலே ..




ஒருமாதத்தில் வருகின்ற குறிப்பிட்ட நாளுக்கு ஒரு தனிச்சிறப்புண்டு. அந்த வகையில் ஆவணி மாதத்தில் ஞாயிற்றுக்கிழமை சிறப்புடையது. சூரியனைக் குறித்து விரதம் அனுட்டிப்பவர்கள் ஆவணிமாத முதல்ஞாயிறில் விரதம் அனுஷ்டித்து, கடைசி ஞாயிற்றுக்கிழமையில் சூரியனுக்கு பொங்கலிட்டு வழிபடுவர். வருடம் முழுவதிலுமுள்ள ஞாயிறுகளில் விரதம் நோற்க இயலாதவர்கள் ஆவணி மாதத்திலுள்ள ஞாயிற்றுக்கிழமைகளைத் தேர்ந்தெடுப்பர். அதுவும் முடியாதவர்கள் ஆவணியில் வரும் கடைசி ஞாயிறையேனும் விரதத்திற்குப் பயன்படுத்தத் தவறார்.

## காயத்ரி ஜபம் ..



உபகர்ம விளக்கத்தில் மிக விரிவாக கூறப்பட்டுள்ள மந்திரம் காயத்ரி. பாவங்கள் அகலவும், பலம் சேரவும் துணையிருக்கும் வீரியமுள்ள ஸ்லோகம் இது. இதன் தனித்துவமும், கிருத்தியங்களும், சக்திகளும் வர்ணனைக்கப்பாற்பட்டவை.
வருடத்திலொருமுறை வரும் காயத்ரி ஜபத்தை பக்தி சிரத்தையோடு அதற்கேற்ற விதிப்படி செய்யவேண்டும். காயத்ரியைவிட சிறந்த மந்திரம் வேறேதுமில்லை.

## ரிஷி பஞ்சமி விரதஸ்வரூபம்!

ஆவணி சுக்கில பஞ்சமியன்று நாயுருவியால் பல்துலக்கி, ஸ்நானம் செய்து உபவாசமிருந்து, பகலில் ரிஷிகளுக்குரிய காலத்தில் சப்தரிஷிகளை கலச தீர்த்தத்தில் ஆவாகனம் செய்து, சோடோசோபசார பூஜை செய்யவேண்டும். வசிட்டருக்கருகில் அருந்ததியை தனியாக பூஜிக்கவேண்டும். இரவிலும் பூஜை செய்து கண்விழித்து கதை கேட்டு, காலையில் நித்திய கர்மா முடிந்தவுடன் புந பூஜை செய்து, கலச ஜலத்தால் அபிஷேகம் செய்துகொள்ளவேண்டும். இப்படி ஏழாண்டுகள் செய்து, முடிவில் தம்பதி பூஜை செய்து விரதத்தை நிறைவு செய்யவேண்டும். இதனால் ஸ்திரீகள் இந்திரனிடத்தில் பெற்ற பிரம்மஹஸ்தி தோஷம் அகலுமாம்.



## அற்புதமான ஆவணி மாதத்திலே ..




## உமா மகேஸ்வர விரதக் கதை ..

ஒருமுறை மாமுனிவர்கள் எல்லோரும் ஓரிடத்தில் கூடினார்கள். உலகத்திற்கு காரணமான பொருள் எது? எதை அறிந்தால் மோட்சானந்தம் பெறலாம் என்ற வாதத்தில் இறங்கினார்கள். வாதம் முடிவற்றுப் போனதால் அனைவரும் கடும் தவத்தில் ஈடுபட்டனர். தவத்தின் பயனாக முதலில் பிரம்மவித்யாஸ்வ ரூபினியான அம்பிகை ஞானக்கண்ணுக்குப் புலப்பட்டாள். அவளை வணங்கித் துதித்த மறுகணமே அவளருளால் சிவ தரிசனமும் கிட்டியது.

சக்தியும், சிவனுமே உலக காரணம், மோட்சஸ்வரூபம் என்றுணர்ந்தனர். ஆதலால், சர்வ வித்தைகளுக்கும், சர்வ மார்க்கங்களுக்கும் கர்த்தாவான அவர்களை ஒன்றாகப் பூஜிக்கவேண்டுமென முடிவு கட்டினர். அந்நாளே இந்த விரத நாளாகும்.

மாமுனிவர் துர்வாசர் சிவனின் அம்சமாவார். அவர் தனது தவவலிமையால் அரிய வரங்கள் பெற்றவர். தினமும் கைலாசம் வந்து சிவதரிசனம் பெறவும், தான் அளிக்கின்ற சாபங்களால் தனது தவவலிமை குறையாமலிருக்கவும் வரம் பெற்றவர். பாவமும், தோஷமும் இல்லாதவரே சிவநிர்மாலியத்திற்கு ஏற்றவர் ஆவார். ஆதலால், துர்வாசருக்கு சிவனார் அளித்த வில்வ மாலை கிடைத்தது. அதைப்பெற்று வரும் வழியில் கருடன் மீதேறி வரும் விஷ்ணுவை கண்டார். அவரே இந்த மாலைக்குத் தகுதியானவர் என கருதிய துர்வாசர் அதனை நாராயணனிடம் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்டவர் தன் கண்ணில் ஒற்றிவிட்டு கருடனின் கழுத்தில் வைத்தார். இதனால் கடுங்கோபம் கொண்ட துர்வாசர் ''இலக்குமி உன்னைவிட்டுப் பிரிவாள் " என்று சபித்தார். இதையடுத்து இலக்குமி பாற்கடலில் தங்கி நின்றாள். கருடனும் சக்தியிழந்து குகையில் வசித்தார். இதனை அறிந்த சிவபெருமான் உமா மகேஸ்வர விரதத்தை அனுட்டிக்குமாறு விஷ்ணுவுக்கு கூறினார். அதனை அனுட்டித்த விஷ்ணு கடலைக் கடைந்து வெளிவந்த இலக்குமியையும், பூரண சக்தி அமைந்த கருடனையும் பெற்றார்.



## ஆவணி மாத குருபூஜைகள் ..

01. -- குலச்சிறையார்
02. -- குங்கிலியக்கலையர்
03. -- செருத்துணையார்
04. -- நீலகண்ட சிவாச்சாரியார்
05. -- புகழ்த்துணையார்
06. -- அதிபத்தர்
07. -- இளையான்குடிமாறர்
08. -- மறைஞான சம்பந்தர்




**தேவர்களும், அசுரர்களும் திருப்பாற்கடலில் அமுதம் கடைந்தார்கள் அல்லவா! அந்தக் கடல் இப்போது எந்தப் பகுதியில் இருக்கிறது?**

இதற்கு பதில் பெறுவதானால் பிரபஞ்சத்தின் முழுப்பகுதியும் நமக்குத் தெரிந்திருக்கிறதா என்றல்லவா முதலில் பார்க்கவேண்டும் .. சரி இருக்கட்டும்.

ஏழு வகை கடல்கள் பூமியில் உண்டு. லவண- உப்பு, இட்சு- கரும்புச்சாறு, சுறா- கள், சர்ப்பி- நெய், ததி- தயிர், ஷீர்- பால், உதக- இனிப்பு என்று கடல்களை வகைப்படுத்துகிறது புராணம்.

நம் கண்களுக்கு பெரும்பாலும் தெரிகிற கடல் லவணம். அதாவது உப்புக்கடல். மற்றவை தெரியவில்லை. தெரிகிற கடலில் உப்பின் சாரம் இருப்பதால்தான் அப்படி ஏற்கிறோம். அதேபோல் தயிர், நெய் போன்ற சாரமுள்ள கடல்களும் இருக்கலாம். பிரபஞ்சத்தில் பல லோகங்களையும் இணைத்தே புராணச் சம்பவங்கள் வருகின்றன. அதனால் இக்கடல்களை உடைய கிரகங்கள் இருக்கலாம். உப்புக்கடலை மட்டுமே நேரடியாகப் பார்க்கும் வசதி நமக்கு இருப்பதால் இதனை நம்புகிறோம் இல்லையா

**'பிரம்மாண்டகரண்டக மத்யே ..'** என்று சொல்வதுபோல அநேக கோடி பிரம்மாண்ட லோகங்களில் ஒரு சிறு கிரகத்திலேயே நாம் இருக்கிறோம். இதனால் அந்த அநேக கோடிகள் இல்லையென்று முடிவு செய்யலாமா! எவ்வளவு ஆய்வு செய்தாலும் சில விஷயங்கள்தான் நம் கண்களுக்கு எட்டும். அதனால் நமக்குத் தெரிந்தவை மட்டும்தான் உண்மை என்று கருதலாகாது. ஒரு சந்தர்ப்பத்தில் நாமே பாற்கடல் அருகே பிறக்கலாம். அப்போது உப்புக்கடல் நமக்குத் தெரிந்திருக்காது.


**''தேவதேவோத்தமா தேவதா சார்வபௌமா, அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகா ..''** என்று இறைவனைத் துதிக்கிறோம். கோடி அகில அண்டங்களில் பாற்கடலை எந்தப்பகுதியில் வைத்திருக்கிறான் என்று எப்படி அறிவது?

## அழுது வேண்டலாமா..?

**தெய்வத்திற்கு எதிரே நின்று வணங்கும்போது அழுது வேண்டலாமா?**

வேண்டுதலில் அழுகை முக்கியம் என்றில்லை. சினிமாவிலோ, நாடகங்களிலோ அழுகிறார்கள் என்றால் அது பார்ப்பவர்களுக்குப் புரியவேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் கடவுளை வணங்கும்போது உள்ளம் கசிந்து கண்ணீர் வருவது இயல்புதான். அது ஆனந்தக்கண்ணீர். மற்றும்படி வேண்டுதலுக்கு அழுகை அவசியமற்றது

ஆண்டவனை வணங்க வாய்ப்பு கிடைத்தற்காக சந்தோஸப்படுவதை விட்டுவிட்டு எதற்காக அழவேண்டும்?




# நமது இதிகாச நாயகர்கள் ..!

# ஆச்சார்ய துரோணர்

## உலகின் ஈடிணையற்ற ஆசிரியர்!

## கற்பித்தலின் மகா மேதை!

ஒருநாள் கங்கை ஆற்றில் நீராடச் சென்ற பரத்வாஜ முனிவர் யௌவனமும், இளமையும் கொண்ட ஒரு அழகியைக் கண்டார் ..

கிருததாசி என்ற அப்சரஸாகிய அவள் நீராடிக்கொண்டிருந்த அழகில் மயங்கிய முனிவர் சற்றே தனக்குள் மோகவயப்பட்டார். அதனால் வெளிக்கிளம்பிய உணர்ச்சியை ஒரு பாத்திரத்தில் ஏந்திப் பாதுகாத்தார். அதில் உருவெடுத்தவரே துரோணர்!

கல்வி வேள்வியைக் கற்றறிவதற்காக குருகுலத்தில் சேர்ந்த துரோணருக்கு ஒரு நண்பன் கிடைத்தான். அவன் பெயர் துருபதன். ஈருடலும் ஒருயிருமாக இணைபிரியாமல் பயின்று வளர்ந்தார்கள். குருகுலக்கல்வியை முடித்துக்கொண்டு இருவரும் பிரியும்போதுதான் தன் நண்பன் பாஞ்சால தேசத்து அரசகுமாரன் என்ற விபரம் துரோணருக்குத் தெரிந்தது.

''நண்பா, நான் முடி சூடியதும் முதல்வேலையாக உனக்குப் பாதி ராஜ்யம் தருவேன் ..'' என்று துரோணரிடம் வாக்களித்துச்சென்றான் நண்பன்.


வேதங்களும், போர்ப்பயிற்சிகளும் கிரமமாகக்கற்றுத் தேர்ந்த துரோணர், தந்தையின் உத்தரவை ஏற்று சந்தான விருத்திக்காக மணம் செய்துகொண்டார்.

இவர்களுக்குப் பிறந்தவன் அஸ்வத்தாமா. தந்தையும், மகனும் பிற்காலத்தில் மகாபாரதத்தின் முக்கிய பாத்திரங்களாக விளங்கியவர்கள்.


குடும்பமாகிவிட்ட துரோணரை வறுமை வாட்டத்தொடங்கியது. தன் மகன் அஸ்வத்தாமனுக்குப் பால் தருவித்துக் கொடுப்பதற்கும் வழியின்றித் தவித்தார். நிலைமை மோசமாகவே, தன் நண்பனின் ஞாபகம் அவருக்கு வந்தது. இப்போது துருபதன் மகுடம் தரித்து மன்னனாகிவிட்ட சேதியும் அறிந்தார்.

வாக்களித்தபடி தன் நண்பன் தனக்குப் பாதி ராஜ்யம் தந்தால் தனது வறுமை ஒழிந்துவிடும் என்று நம்பிய துரோணர், குடும்பத்தோடு பாஞ்சால தேசம் சென்றார்.

அங்கே அவர் எதிர்பார்த்தது நடக்கவில்லை. வறுமைக்கோலத்தில் காட்சியளித்த துரோணரை வெறுத்து, அவமதித்தான் துருபதன் ''அந்தணரே, உமது சித்தம் கலங்கிவிட்டதோ, நீரும் நானுமா நண்பர்கள்? எனக்கு நினைவில்லை. பாதிராஜ்யக் கதையும் எனக்குத் தெரியாது. போய்வாரும் ..'' என்று ஆணவத்தோடு ஏசித்துரத்தினான்.



# குருநாதரை மிஞ்சிய ஒரே சீடன்!




இதனால் ஆத்திரமும், அவமானமும் அடைந்தவறாக வெளியேறிய துரோணர் துருபதனைப் பழிவாங்க சங்கற்பம் கொண்டார். ''துருபதனை என்னிடம் மண்டியிடச் செய்வேன் ..'' என்று சபதம் பூண்டார். ஊர் திரும்பிய அவரை வறுமை மேலும் வாட்டிய நிலையில் உருக்குலைந்த தோற்றத்தோடு நாட்களைக் கடத்தினார்.

ஒருநாள் அவர் அஸ்தினாபுரத்தின் வழியாகச் செல்கையில், சிறுவயது ராஜகுமாரர்கள் ஒரு கிணற்றைச்சுற்றி நிற்பதைக் கண்டார். நெருங்கிச்சென்று அவதானித்தபோது அவர்கள் விளையாடிக்கொண்டிருந்த பந்து கிணற்றுக்குள் விழுந்துகிடந்தது. அதனை எடுக்கமுடியாமல் விழித்துக்கொண்டு அவர்கள் நிற்பதைப்பார்தது புன்னகைத்துவிட்டு ஒரு காரியம் செய்தார்.

அருகில் கிடந்த ஈர்க்குக்குச்சி ஒன்றை எடுத்து ஆழத்தில் மிதந்த பந்தை நோக்கி வீசினார். பந்தில் அந்த ஈர்க்கு குத்தியபடி நின்றது. இன்னும் சில ஈர்க்குகளை எடுத்து தொடர்ந்து வீசவே அவை ஒன்றின்மீது ஒன்று பொருந்தி கிணற்றின் மேற்பகுதிவரை நீண்டது. பின்னர் அந்த ஈர்க்குக்கயிற்றாலேயே பந்தை சுலபமாக எடுத்து அவர்களிடம் தந்தார்.

இச்செயலால் வாயடைத்துநின்ற அரண்மனைச் சிறார்கள் பந்தை மறந்துவிட்டு துரோணரை வைத்த கண் வாங்காமல் பார்த்தார்கள். இந்த சாகசத்தை செய்தவர் பரதேசிக்கோலத்தில் தெரிந்தாலும் சாதாரண மனிதரல்லவென்று அவர்களுக்குப் புரிந்தது.

''பெரியவரே, தாங்கள் யார்? ஏன் இந்தக் கோலத்தில் இருக்கிறீர்கள். இந்த வித்தையை எப்படிச் செய்தீர்கள்? ..'' என்று தயங்கித் தயங்கி கேட்டார்கள். தனது வாழ்வின் மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்தப் போகின்ற அந்தக்கேள்விகளுக்கு அர்த்தபுஷ்டியோடு பதில் கூறினார் துரோணர்.

''குழந்தைகளே, நீங்கள் அரண்மனைக்குச்சென்று உங்கள் தாத்தா பீஷ்மரிடம் இச்சம்பவத்தை கூறுங்கள். நான் யாரென்பதை அவர் உங்களுக்குக்கூறுவார் ..'' என்றார். விரைந்தோடிச்சென்ற சிறுவர்கள் நடந்ததை பீஷ்மரிடம் விவரித்தபோது அளவற்ற ஆனந்தமடைந்தார் அவர். வந்திருப்பது விலைமதிப்பற்ற போர்நிபுணராகிய துரோணாச்சாரியார் என்று உணர்ந்தார்.

உடனேயே சிறுவர்களோடு புறப்பட்டு அவ்விடத்துக்குச் சென்றார் பீஷ்மர்.

துரோணரை ஆரத்தழுவி, பூரண மரியாதைகளோடு ராஜசபைக்கு அழைத்துவந்தார். '' ஆச்சாரியரே, தங்களின் வரவால் இந்த அஸ்தினாபுரம் பெருமை கொள்கிறது. இன்றிலிருந்து பாண்டவ, கௌரவ புதல்வர்களுக்கு தாங்களே குருவாக இருக்க வேண்டும் ..'' என்று வேண்டினார் பீஷ்மர்.

மிகவும் பேறுபெற்ற பதவியாக அதனை மகிழ்ச்சியோடு ஏற்றார் துரோணர். தனது வறுமையான வாழ்வு முடிவுக்கு வந்தவிட்டதை உணர்ந்தார். சகல அரச மரியாதைகளும், மாளிகை வாசமும் கொண்டு, புகழ்பெற்ற அஸ்தினாபுர சாம்ராஜ்யத்தின் அரசவையை அலங்கரித்தார்.

அஸ்தினாபுரதத்தின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்ற மாவீரர்களையும், பலசாலிகளையும் உருவாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட துரோணர் மிகச்சிறப்பான பயிற்சிகளை அரசகுமாரர்களுக்கு அளித்தார்.

அஸ்திரப்பிரயோகம், குதிரையேற்றம், வாட்போர், கதாயுதம், வேலெறிதல் போன்ற போர்ப்பயிற்சிகளோடு வேதங்கள், தர்மங்கள், உபநிஷதங்கள், தியானங்கள் போன்ற கல்விகளையும் புகட்டினார். அவரது பயிற்சி நேர்த்தியை அறிந்து வியந்த பலதேசத்து ராஜகுமாரர்களும் புறப்பட்டுவந்து துரோணரின் குருகுலத்தில் இணைந்தார்கள்.

துரோணரிடம் சகல கலைகளையும் கற்றுவந்த சிறந்த மாணவர்களில் ஒருவன் குருவின் கவனத்தை எந்நேரமும் கவர்ந்து வந்தான். மற்ற ராஜகுமாரர்களோடு ஒப்பிட முடியாத அளவுக்கு அதிபாராக்கிரமசாலியாக உருவாகிக்கொண்டிருந்தான். எந்த வித்தையையும் கவனத்தோடு கற்பதிலும், குருவின்மேல் அளவற்ற பக்தி கொள்வதிலும் அவனை யாராலும் மிஞ்ச இயலாதிருந்தது. குறிப்பாக விற்பயிற்சியில் அதிவேகமாக முன்னேறினான். இதனால் குளிர்ந்துபோன துரோணர் அவனை பிரியமாக நடத்தினார்.

அந்த மாணவன் அர்ஜுனனே! உலகின் நிகரற்ற வில்வீரனாகத் திகழ்ந்தவனும் அவனே!

ஒருநாள் மாணவர்களுக்கு உபதேச நிகழ்ச்சியை முடித்துவிட்டு, தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தினார் துரோணர். துருபதனிடம் தான் பட்ட அவமானத்தை விவரித்துவிட்டு தனது சபதத்தை நிறைவேற்ற உதவுவீர்களா என்று கேட்டார்.

## அரச பலத்தைக் காட்டிலும், அந்தண பலம் பெரிது! ..

எல்லோரும் மௌனமாக இருக்க அர்ஜுனன் எழுந்து, ''தங்களின் சபதத்தை நான் நிறைவேற்றித்தருகிறேன் குருவே ..'' என்றான். இதனால் அவன்மீது மேலும் அபிமானம் ஏற்பட்டது துரோணருக்கு. அவனே தனது பெயர் சொல்லப்போகும் பெரும்வீரன் என்றுணர்ந்தார்.

குருவாசம் முடிந்து மாணவர்கள் வெளியேறும் தருணம் வந்ததும் முதல் வேலையாக குருவின் சபதத்தை நிறைவேற்றப் புறப்பட்டான் அர்ஜுனன். சொன்னதைப் போலவே துருபத மன்னனுடன் போரிட்டு சிறைப்படுத்திக் கொண்டுவந்து துரோணரின் முன் நிறுத்தினான்.

''இப்போது என்ன சொல்கிறாய் துருபதா! நான் உனது நண்பனா, இல்லையா? நண்பனாக ஏற்றாயானால் பாதி ராஜ்யம் மட்டும் எனக்குப் போதும். இல்லையெனில், உன் முழு ராஜ்யமும் இப்போது என் வசமே. என்ன சொல்கிறாய்? ..'' என்று துரோணர் கேட்டபோது நொருங்கிவிட்டான் பாஞ்சால தேசத்து மன்னன் துருபதன். அரசபலத்தைக் காட்டினும் அந்தண பலம் பெரிதென்று இப்போது புரிந்தது.

''அந்தணரே, ஆற்றல்பெற்ற மகான்களுக்கு எதுவுமே அரிதன்று .. நான் தங்களின் நண்பனாக இருக்கவே பெரிதும் விரும்புகிறேன் ..'' என்றான்.

இதன்பேரில் துரோணர் துருபதனுக்கு விடுதலையளித்தார். அதுமட்டுமல்ல, ராஜ்யத்தில் பாதியாக தனக்குக் கிடைத்ததை அவனுக்கே நட்போடும், மரியாதையோடும் திருப்பிக் கொடுத்தார்.

இதனால் தலை குனிந்த துருபதன் உள்ளூர துரோணரை வஞ்சம் தீர்க்க எண்ணினான். முன்பு போல அவர் இப்போது பஞ்சப்பரதேசி அல்ல. பலம்பொருந்திய மாணவவர்களைக் கொண்டுள்ள அரச குரு. அவரை ஒழிக்க புதிதாக ஒருவன் பிறந்தால்தான் டு. ஆகவே, அப்படியான புதல்வனை வேண்டி ஒரு யாகம் செய்தான். அதில் அவனுக்கு ஒரு கன் பிறக்கவே அவனுக்கு திஷ்டதுய்மன் என்று பெயரிட்டான்.




திஷ்டதுய்மனோடு ஒரு பெண் குழந்தையும் பிறக்கவே அவளுக்கு திரௌபதை என்று பெயரிட்டான். பின்னர் அர்ஜுனனுக்கு மனைவியாக வந்தவளும் இவளே.

மகாகுரு துரோணரின் குருகுலத்தின் போது இடம்பெற்ற பல சம்பவங்கள் மெய்சிலிர்க்க வைப்பவையாகும். அர்ஜுனனே உலகின் தலைசிறந்த வில்வீரனாக வரவேண்டுமென்பது துரோணரின் விருப்பம். ஆனால், இன்னும் இரண்டு வில்வீரர்கள் அர்ஜுனனுக்குச் சமமாக உருவாகி வருவது அவருக்குத் தெரியாமல் இருந்தது. ஒருவன் சாதாரண தேரோட்டியான அதிரதனின் மகன் கர்ணன். இன்னொருவன் கானகத்து வேடனான ஏகலைவன்.

இவ்விருவரையும் சமாளித்து, அர்ஜுனனை முன்னிலைக்குக் கொண்டுவரவேண்டிய இக்கட்டான நிலைமைகள் துரோணருக்கு வந்தன.

ஒருமுறை தன் மாணாக்கர்களோடு வேட்டைப்பயிற்சிக்காக காட்டுக்குச் சென்றார் துரோணர். அங்கே அர்ஜுனனின் நாய் காயத்திற்கு இலக்காகி குற்றுயிராக வந்து விழுந்தது. அதன் உடம்பில் ஆயிரம் துளைகள் இருந்தன. ஆனால் ஒரு அம்பு மட்டுமே தைத்திருந்தது. இதனால் பெரும் அதிர்ச்சியடைந்தான் அர்ஜுனன். காரணம், ஒரே அம்பினால் ஆயிரம் துளைகளை இடக்கூடிய நுட்பத்தை தனக்கு மட்டுமே குருநாதர் கற்றுத் தந்திருப்பதாக நினைத்திருந்தான். அம்பெய்தவனைத் தேடிச்சென்றபோது அவன் படிக்காத வேடனாக இருந்ததோடு, தனது குருநாதர் துரோணர் என்றுவேறு கூறினான். இதனால் தன் குருவை சந்தேகித்தான். அர்ஜுனன்.



துரோணரும் இதனால் பெரும் வியப்புற்று அந்த வேடனைத் தேடிச் சந்தித்தபோது அவன் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினான். சில நாட்களுக்கு முன் தன்னைத்தேடிவந்து வில் வித்தை கற்றுத்தரக் கோரியதும், அவனை மாணவனாக ஏற்க மறுத்ததும் துரோணருக்கு நினைவு வந்தது. தன்னைப்போல் ஒரு உருவத்தைச் செய்து, அதன்முன்னிலையில் மானசீகமாக அஸ்திரப் பிரயோகங்களைக் கற்றுத்தேறியுள்ளான் என்பதையும் அறிந்து சிலையானார்.

அவனின் வளர்ச்சி தன் மாணவனுக்குத் தடையாகிவிடுமென்றும், கல்வியறிவற்றவனிடம் இக்கலை இருப்பது ஆபத்தென்றும் உணர்ந்தார். "ஏகலைவா, உன் சிறப்பை வர்ணிக்க வார்த்தைகள் இல்லையப்பா, என்னை நீ குருவாக ஏற்றதனால் குருதட்சணை தரவேண்டுமே .." என்று கேட்டார். அவனும் ஆனந்தப்பட்டு அவர்கேட்ட குருதட்சணையாக தனது வலது கைப்பெருவிரலை வெட்டிக்கொடுத்தான். இதனால் அம்புதொடுக்கும் கலையை இழந்து பரிதாபத்திற்குறியவனானான்!

அடுத்த வீரனான கர்ணனையும் அவருக்குப் பிடிக்கவில்லை. அவனது பூர்வீகத்தைப்பற்றி அரசவையில் எப்போதுமே மட்டமாக கதைத்து வந்தார். அர்ஜுனனுடன் போரிடும் சமபலம் கொண்டவனாக இருந்தும், துரோணர் போன்றவர்களின் வார்த்தைகளால் மனமுடைந்து, இறுதியில் அர்ஜுனனிடம் போரில் தோற்றான் கர்ணன். மாணவனிடத்தில் ஆசிரியர் காட்டும் அளவற்ற வாஞ்சையின் காரணமாகவே துரோணர் இப்படியாக நடந்தார்.

துரோணரின் இறுதிக்கட்டத்தை பாரதப்போர் நிர்ணயித்தது. கௌரவப் படையின் தளபதியாக பாண்டவர்களின் படையணிகளை சிதைத்தார். இதில் அற்புதமான நிகழ்ச்சி என்னவெனில் அவரது அருமை மாணவனாகிய அர்ஜனன்தான் அவருடன் நேரடியாப் போர்புரிந்தான்.

துரோணரின் தாக்குதலை சமாளிக்க முடியாதநிலையில் பாண்டவர்கள் ஒருநாள் தடுமாறினார்கள். தமது அருமை குருநாதரின் முழு ஆற்றலையும் எதிர்கொள்ளும் ஒரே வீரனான அர்ஜுனன் வேறு திசையில் நின்றதால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தருமரை சிறைப்பிடிக்க ஆயத்தமானார் துரோணர். இதனால் ஸ்ரீகிருஷ்ணர் பீமனை அழைத்து, போரில் ஈடுபட்டிருந்த யாணை ஒன்றைக் கொல்லுமாறு கூறினார். அந்த யாணையின் பெயர் அஸ்வத்தாமா என்று பகவான் அறிவார். பீமனால் யாணையும் கொல்லப்பட, **"அஸ்வத்தாமாவை பீமன் கொன்றான்! "** என்று பெரிதாக சத்தமெழுப்பி துரோணரின் காதில் விழச்செய்தார். தன் மகன்தான் இறந்தானென்ற அதிர்ச்சியில் அவர் நிலைகுலைய, காத்திருந்த திஷ்டதுய்மன் அம் மாவீரரை தனது வாளால் வெட்டிச்சாய்த்தான்.


(மகா புருஷர்கள் இன்னும் வருவார்கள் ..)

## ரிஷி பஞ்சமி!

பெண்களுக்கு இந்த விரதம் முக்கியமானதாகும். இது ருது, அல்லது பஹிஷ்டைத் தீட்டு நின்றுவிட்டபின் அனுட்டிப்பதற்கேற்றது. அறிந்தோ, அறியாமலோ அந்த தீட்டு வீட்டில் கலந்துவிட்டால் அது பாபம் என்று கருதப்படுகிறது. வீட்டிலுள்ளோர்க்கும் துன்பங்கள் ஏற்படும். இந்தச் சமயத்தில் நம்நாட்டுப் பெண்மக்கள் வீட்டைவிட்டு விலகி நியமத்துடனிருந்து நான்காம் நாள் ஸ்நானம் செய்து உள்ளே நுழைவார்கள். இது தொன்றுதொட்டு இருந்து வரும் பழக்கமாகும். அவர்களுக்கு வழங்கி மிகுதியிருக்கும் உணவை எவரும் உண்ணார். அந்த மங்கையை வீட்டுக்காகதவளாக தீட்டுக்காரி என்ற பெயரால் அழைப்பர். குழந்தைகள் உண்டாவதற்காக இறைவன் பெண்களுக்கு ருதுவை அளித்து முதிர்ச்சித்தன்மையில் நிறுத்துகிற தருணம் அது. அச்சமயம் அவள் யாருடைய அருகிலும் வராமலும், எந்த வேலையையும் செய்யாமலும் இருக்கவேண்டுமென்பது கட்டாயமான விதி. பஹிஷ்டைக்குரல் கேட்டால்கூட பெரியோர்கள் உண்ணமாட்டார்கள் என்றாலே பார்த்துக் கொள்ளுங்களேன். திண்ணையில் ஒரு கோடியில் மறைவாக அவளை உட்கார வைப்பர். மூன்று நாட்களுக்குமுன் அவள் குளிக்கவேண்டுமானால் அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கவேண்டும். ஒன்று கிரகணம் நேர்ந்திருக்க வேண்டும், அல்லது நெருங்கிய உறவினர் இறந்திருக்கவேண்டும். எவரேனும் தண்ணீரை எடுத்துப் பாத்திரத்தில் ஊற்றவேண்டும். குளங்களில் குளிக்க அனுமதியில்லை.

# இந்துசமயம் பெண்களை பாதுகாக்கிறது ..

**பெண்களின் மேல் எந்தளவுக்கு நமது சமயம் அக்கறை வைத்திருக்கிறது, அதைப் பேணி நடைமுறைப்படுத்த நம் பெரியோர்கள் எவ்வளவு சிரத்தை எடுத்துக்கொள்கிறார்கள் என்று அறியும்போது நம் கண்கள் கலங்கிவிடும்.**






**கடுமையான விதிகளுடன் பெண்கள்!**

## மண்ணால் உடல் சுத்தம்!

நான்காம் நாள் மணலால் உடலைச் சுத்தம் செய்து 33 முறை நீரினுள் அமிழ்ந்து ஸ்நானம் செய்யவேண்டும். ஸ்நானம் பண்ணிய தினத்தில் அப்பெண் வீட்டினுள்ளே நுழையலாம். நடமாடலாம். ஆனால் எந்த ஒரு வேலையும் செய்யலாகாது.

# மங்கையர் உள்ளம் மங்காத செல்வம்!



## இந்த கடுமையான விதிகளின் முக்கிய தத்துவம் என்ன?

உடலிலிருந்து அசுத்தங்கள் வெளிக்கிளம்பும் சமயம் அது. அச்சமயத்தில் அருகே வருபவருக்கு நோய்கள் வரலாம். அருகே வருபவரின் ஆத்ம சக்தி பாதிக்கப்படலாம். துளசி, வில்வம் போன்ற தெய்வீக மரங்களின் அருகே பஹிஷ்டைக்காரி சென்றால், அவை பட்டுப்போவதைக் காணமுடியும். ஏற்கனவே மென்மையான அவர்களுக்கு இச்சமயங்களில் அதிகளவு பலவீனம் தோன்றும். ஒரு வேலையும் செய்யாமல் ஓய்வில் இருப்பது அவசியம். அப்போதே உடம்பில் பலம் உண்டாகும்.

## கடுமையான நியமங்களே அவர்களைப் பாதுகாக்கின்றன

பெண்களால் முன்னெடுக்கப்படும் பெரும்பணி பிரசவம். மென்மையான அவர்களின் உடலும், மூளையும், புலன்களும் துர்பலமாகிவிடக்கூடாது என்பதில் நம்நாட்டுப் பெரியவர்கள் கவனத்துடன் இருந்தனர். இதனாலேயே கல்வி, கடினமான உத்தியோகம் அவர்களுக்கு வேண்டாம் என்றனர். பஹிஷ்டா காலத்தில் பல நியமங்களுடன் அவர்களைக் காப்பாற்றினர். நியமம் இல்லாவிடில் நோயும், தீயசக்திகளும் சுலபமாக அவர்களின் உடலைப் பற்றிக்கொள்ளும். பிறக்கும் குழந்தைகளும் துர்பலமாயும், அற்பாயுசுமாயும் பிறக்கும்.

அபலைகள் நோய்வாய்ப்படாமல் ஆரோக்கியமாக இருந்து தர்மத்தை ரட்ஷிக்கவேண்டும், நல்ல பிரஜைகளை உருவாக்கவேண்டும் என்று நமது வேதங்கள் கருதுகின்றன. வீட்டுவேலைகளைக்கூட செய்யவேண்டாமென மாதாமாதம் மூன்று நாட்களுக்கு கட்டாயமாக ஓய்வளிக்கிறது. அச்சமயங்களில் மஹிஷ்டா நியமம் என்ற பெயரால் உண்பதும், உறங்குவதும் தவிர வேறு எந்த வேலையும் செய்யாதே எனக் கட்டளையிடுகிறது.

ஜலத்தில் இறங்கி முழுகினால் பிறக்கும் சிசு நீரில் மூழ்கிவிடும் என்றும், கயிறு திரித்தால் பிறக்கும் சிசு தூக்குப்போட்டுக்கொள்ளும் என்றும் வேதங்கள் எச்சரிக்கின்றன. அதுபோலவே, எண்ணெய் தேய்த்துக்கொண்டால் குஷ்டரோகமும், கண்ணுக்கு மை இட்டால் குருட்டுப்பிள்ளையும், சித்திரம் வரைந்தால் வழுக்கைத்தலையாகவும், நகத்தை கிள்ளினால் சொத்தை புத்திரனும் பிறப்பான் எனக்கூறி எச்சரிக்கின்றன வேதங்கள்.

இவைபோன்ற காரியங்களை நிறுத்துவது கடினமே. தாய்மார்கள் தமதுடலில் அக்கறை வைக்கார், தமக்குப்பிறக்கும் குழந்தையைப் பற்றியே மட்டும் கருத்தாய் இருப்பார்கள் என்பதாலேயே இவ்வாறு கூறுகிறது வேதம். இதுபோன்ற விஷயங்களை இன்னும் எத்தனையோ உவமைகளாலும், கதைகளாலும் விளக்குகிறது நமது சமயம்.

**பெண்களால் சமூகத்திற்குக் கிடைக்கின்ற பெரும்பணிக்கு ஈடு இந்த உலகில் எதுவுமே இல்லை. அப்படிப்பட்டவர்களின் நலனைப் பாதுகாப்பதைத் தவிர முக்கியமான வேலை நமக்கு எதுவும் இருக்கமுடியாது.**



## அறிந்துகொள்ளவேண்டிய சமயப் பொக்கிஷங்கள்! ..

# பூஜைகள்! ..

பூஜையில் பதினாறு வகை உபசாரங்கள் தெய்வத்திற்கு அளிக்கப்படுகின்றன ..

**ஆவாஹனம், தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமநீயம், அருக்கியம், புஷ்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், பாநீயம், ஜபசமர்ப்பணை, தீபாராதனை** என்பனவே அவைகள்.

மூலமந்திரம் சொல்லி இறைவனை வரவழைத்து, பூஜிக்கின்ற திருவுருவத்தில் நிலைக்கச்செய்தல் ஆவாஹனமாகும்.

''சுவாமி, இந்த எளியவனை ஏற்று
பூஜை முடியும்வரை விக்கிரகத்தில் தங்கி, அனுக்கிரகம் தரவேண்டும்..'' என்று கசிந்துருகி வேண்டுவது தாபனம் ஆகும்.

அனுக்கிரகத்தை தரவேண்டியவர் பூஜிக்கப்படும் கடவுள் என்பதையும், பெற வேண்டியவர் பூஜிக்கின்ற தான் என்பதையும் உருவாக்குவதே சந்நிதானம் ஆகும்.

'எப்போதும் இறைவனின் கருணையில் இருக்கவேண்டும்' என பிரார்த்திப்பதே சந்நிரோதனம் ஆகும்.

இறைவன் எழுந்தருளும் திருவுருவைச் சுற்றி கவச மந்திரத்தினால் மூன்று அகழ்களும், மூன்று மதில்களும் கவசமாக உண்டாகியிருப்பதாக பாவனை செய்வது அவகுண்டனம் எனப்படும்.

வழிபடுகின்ற மூர்த்திக்கு முன்பாக காராம்பசுவின் மடி போன்றதொரு முத்திரை காட்டுதலே தேனுமுத்திரை எனப்படும். தேவ அமிர்தத்தையே இறைவன்மீது பொழிவதாக அர்த்தப்படும்.

இறைவனின் மூலமந்திரத்தை 'நம' என்னும் இறுதி அட்சரம் வருமாறு உச்சரித்து, தீர்த்தத்தை மூர்த்தத்தின் திருவடிகளில் சமர்ப்பிப்பது 'பாத்தியம்' எனப்படும்.

இறைவனின் மூலமந்திரத்தை 'ஸ்வதா'என்னும் அட்சரம் இறுதியில் உடையதாக உச்சரித்து, ஐந்து தடவை மும்மூன்று தரம் தீர்த்தத்தை திருவாயில் சமர்ப்பிப்பது ஆசம நீயம் ஆகும்.

மூலமந்திரத்தை உச்சரித்தபடி மூர்த்தியின் சிரங்களில் தெளிக்கப்படும் இவை முறையே பாத தீர்த்தம், உண்ணும் நீர், முடிக்கண்நீர் தெளித்தல் என்பதாகும். இதையே அர்க்கியம் என்பர்.

மூலமந்திரத்தை உச்சரித்தவாறு அன்றலர்ந்த மலர்களை இறைவனின் முடியில் சாத்துதலை புஷ்பதானம் என்றழைப்பர்.

சிவ சந்நிதானத்தில் இடுகின்ற தூபம் கிரியா சக்தி ரூபமாகும். இதனைக்கொண்டு ஆணவமாகிய அறியாமையை நீக்குதல் என்பதை உணர்த்துதல் இதன் பொருளாகும்.

சித்சக்தியாகிய தீபம் ஆன்மாவின் மலத்தைப் போக்கி, மெய்ஞானத்தை விளக்கவல்லது. சிவபெருமானுக்கு தீபம் சமர்ப்பித்தலின் கருத்து இதுவே.

அகங்காரம், சங்கற்பம், குரோதம், மோகம் என்பவை ஆன்மாவோடு ஒட்டியிருக்கும் குணங்களாகும். இவற்றை அமுதமாக மாற்றி இறைவனுக்கு சமர்ப்பித்தலே நைவேத்தியம் ஆகும்.

வாசனைமிக்க தீர்த்தத்தை சமர்ப்பித்து, இறைவனை திருப்திப்படுத்துவது பாநீயம் எனப்படுவதாகும்.

மூலமந்திரத்தை ஜபித்தவாறு இறைவனை வணங்குவது ஜப சமர்ப்பணை ஆகும்.

'அருட்பெரும் சுடரே', 'சோதியே', 'எங்கும் பேரொளியாய் நிறைந்திருப்பவனே' என்பதை உலக மக்களுக்கு உணர்த்தும் வண்ணம், இறுதியாக தீபாராதனை காட்டுவது தீபாராதனை எனும் மங்களா ஆரத்தியாகும்.

தாம் நினைக்கின்ற தெய்வத்தை எண்ணிச்செய்யும் கிரியா பேதம்தான் நித்திய பூஜை எனப்படுகிறது..

இதில் பாக்கிய பூஜை, அந்தர பூஜை என இருவகை உண்டு.

எண்ணத்திலிருக்கின்ற தியான மூர்த்தமே வெளியிலும் பூஜிக்கப்படுகிறது. சமயக்கோட்பாடுகளுக்கேற்றவாறு அவை நூல்களில் கூறப்படுகின்றன. சத்வ, ரஜஸ், தாமச, தேவ பேதத்தால் பலவகை கொண்டு இப்பூஜைகள் வேறுபடும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

நித்திய பூஜையானது சாங்கம், உபாங்கம், பிரத்யங்கம் என்ற மூன்று வகையில் இருக்கிறது.

அபிஷேகம், பாத்யம், ஆசமணியம், அர்க்கியம், ஆடை, அணிகலன், சந்தனம், மலர் கொண்டு வழிபாடு செய்வது சாங்கம் எனப்படும்.

தூபம், தீபம், திருநீறு அணிவித்தல், குடை, கண்ணாடி, சாமரம், விசிறி, நாட்டியம், ஜபம், கீத வாத்தியம் என்று வழிபாடு செய்வது உபாங்கம் எனப்படும்.

நிவேதனம் செய்தல், பலியிடுதல், வேள்வி செய்தல், நித்யம் உத்சவம், கோதக தானம், வாழ்த்துரை வழங்கல் என்று வழிபாடு செய்வது பிரத்யங்கம் எனப்படும்.

பூஜையிலும் இருவகை உண்டு ..


ஆத்மார்த்த பூஜை, பரார்த்த பூஜை ஆகியவையே அவை.

குரு ஒருவரிடம் தீட்சை பெற்றுவிட்டு அவரது உபதேசப்படி தனது உயர்வை எண்ணிச்செய்வது ஆத்மார்த்த பூஜை. உலக மக்கள் வழிபட்டு உய்வதற்காக தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள், வேந்தர்கள் ஆகியோரால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயங்களில் செய்யப்படுபவை பரார்த்த பூஜை.

## ஆரோக்கிய வாழ்வு

# நலம் தரும் யோகா

தொடர் -- 04



ஜானு சீராசனம்



### 6. ஜானு சீராசனம்

**செய்யும் விதம் ..**

ஒரு காலை நீட்டி மறு காலை மடக்கி, இரண்டு கைகளையும் உயர்த்திக்கொண்டு, சுவாசத்தை உள்ளே இழுத்து வைத்துக்கொள்ளவும். பின் மெதுவாக விட்டுவிட்டுக் குனிந்து, நீட்டிய கால்களின் பெருவிரல் நுனியை எட்டிப்பிடிக்கவும். இந்தவேளை நீட்டி வைத்திருக்கும் கால்களின் முழங்கால் பகுதி மேலே வர எத்தனிக்கும். கவனத்தோடு அதனை எழும்பவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது முக்கியம். பின்பு தலையை முழங்காலில் முட்ட முயற்சிக்கவும். அடுத்து, இதைப்போல் மற்ற கால்களிலும் செய்யவும். தொடர்ந்து செய்துவர மிகமிக இலகுவாக இந்த ஆசனம் கைவசமாகும்.

**பயன்கள் --**

வயிற்றுப்பாகம் நன்கு அழுத்தப்படுவதால், ஜீரணக்கருவிகள் புத்துணர்ச்சியடைந்து நன்கு செயல்படும். கால் நரம்புகள் இழுக்கப்பட்டு, கால் உளைவுகள் நீங்குகிறது. முழங்கால் சிரட்டை அழுத்தப்பட்டு, மூட்டுகளில் உள்ள நீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் மூட்டுவலி நிற்கிறது. கால் சம்பந்தப்பட்ட சகல வியாதிகளும் அடியோடு விலகுகிறது. நீரழிவுக்கும் இது ஒரு சிறந்த ஆசனம்.

### 7. பச்சிமோத்தாசனம்

**செய்யும் விதம் ..**


கைகளை பக்கவாட்டில் வைத்தபடி நிமிர்ந்து படுக்கவும். பின் மெதுவாக கைகளை நீட்டியவாறு எழுந்து சுவாசத்தை இழுத்து, விட்டுவிட்டு குனியவேண்டும். முதல் வாரத்தில் கால் விரல்களை எட்டிப்பிடிக்க முடியாமலிருக்கும். தொடர்ந்து பயிற்சி செய்ய அடுத்த வாரத்தில் சுலபமாக கால்விரல்கள் எட்டிப்பிடிக்கப்படும். முழங்கால் பகுதி மேலே எழும்ப எத்தனிக்கும். இதை எழும்பவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். பிறகு குனிந்து தலையை மெதுவாக கொண்டுவந்து முழங்காலில் முட்ட வேண்டும். இந்த நிலையில் இருபது விநாடி இருந்து உடலை நிமிர்த்த வேண்டும். இதேபோல் மறுபடியும் செய்யவேண்டும். சாதாரணமானவர்கள் மூன்றுமுறை செய்யலாம். நீரழிவு வியாதி உள்ளவர்கள் ஆறு முறை செய்யலாம்.

பச்சிமோத்தாசனம்



**பயன்கள் --**

நீரழிவு நோய்க்கு கைகண்ட மருந்து இது. இந்த ஆசனம் கணையம் என்னும் கருவியை இயக்குவதால் (இன்சுலின்) கணய நீர் சுரக்கப்படுகிறது. வயிற்றோடு இணைந்துள்ள கணயம், கல்லீரல், மண்ணீரல், என்பன நன்கு செயல்பட இது வழிவகுக்கிறது. இதனால் சீனிச்சத்தானது இரத்தத்திலிருந்து பிரிக்கப்பட்டு, உட்செலுத்தப்படுகிறது. உடலுக்கு பலம் ஏற்படுகின்ற அதேவேளை இரத்தத்தில் சீனி இருக்காது. வயிறு பெருத்தவர்கள் இந்த ஆசனத்தை செய்வதால், வயிற்றில் சுருக்கு விழுந்து வயிறு சிறுக்கிறது. தினமும் செய்துவர, வயிறு இறுக்கப்படுகிறது. வாய்வுத்தொல்லை இல்லாமல் போகிறது.



## 8.உத்தானபாதாசனம்

**செய்யும் விதம் ..**


மல்லாந்து படுத்து கைகளை பக்கவாட்டில் வைத்து, கால்களை ஒரு அடி உயரத்திற்குத் தூக்கவேண்டும். மூச்சு சாதாரண நிலையில் இருக்கவேண்டும். இந்த ஆசனம் செய்யும்போது கால்கள் அடிவயிற்றின் உதவியினால்தான் தாங்கப்படுகிறது. அந்த இடத்தில் பலம் குறைவாக இருப்பவர்களுக்கு உடலில் அச்சமயம் நடுக்கம் ஏற்படும். அந்த வேளைகளில் கால்களை கீழே இறக்கிவிட வேண்டும். இல்லையேல் சிலநேரம் நரம்புத்தளர்ச்சி ஏற்பட வாய்ப்புண்டு. பழகிய பின் இருபது வினாடிகள் அப்படியே இருந்து, கால்களை கீழே இறக்கலாம். ஆரம்ப சாதகர்கள் ஒவ்வொரு கால்களாக பழகவும்.

**உத்தானபாதாசனம்**



**பயன்கள் --**

அடிவயிற்றுப்பகுதி அழுத்தப்படுவதால் வயிறு இறுக்கமடைகிறது. தொந்தி கரையும். ஜீரண உறுப்புக்கள் நன்கு இயக்கப்படுவதால் வாய்வுத்தொல்லை பறக்கும். உடலில் உள்ள அத்தனை நாடி நரம்புகளையும் இந்த ஆசனம் இயங்கச்செய்கிறது. பெண்கள் மகப்பேற்றின் பின் இதைச்செய்தால் தொந்தி வராது. படத்தில் காட்டப்பட்டது போல் செய்வதற்குமுன் ஒரு அடி உயரத்தில் ஆரம்பத்தில் பயில வேண்டும்.



04

# ஸ்ரீமத் பகவத் கீதை

## -- பாரதியார் உரை --

தொகுத்து, தொடராக தருபவர் :


**வை. திருச்செல்வம்**

***சஞ்சயன் சொல்லுகிறான் --***

அவ்வண்ணம் இரக்கமிஞ்சியவனாய் நீர் நிரம்பிய சோக விழிகளுடன் வருந்திய அர்ஜுனனை நோக்கி மதுசூதனன் சொல்லுகிறான் : .. 01

''இந்த முட்டுதலில் இவ்வுள்ளச்சோர்வை நீ எங்கிருந்து பெற்றாய்? இஃது ஆரியருக்குத் தகாது. வானுலகைத் தடுப்பது. அபகீர்த்தி தருவது அர்ஜுனா! 02

பார்த்தா, பேடித்தன்மையடையாதே! இது நினக்குப் பொருந்தாது. இழிபட்ட மனத்தளர்ச்சியை நீக்கி எழுந்து நில். பகைவரைச் சுடுவோனே! '' 03



***அர்ஜுனன் சொல்லுகிறான் --***

''மதுசூதனா, பீஷ்மனையும், துரோணனையும் போரில் அம்புகளால் எப்படி எதிர்ப்பேன்? இவர்கள் தொழுதற்குரியர் பகைவரை யழிப்போய்! 04

பெரியோராகிய குருக்களைக் கொல்லாமல், உலகத்தில் பிச்சையெடுத்துண்பதும் நன்று. பொருளை விரும்பும் குருக்களைக் கொன்று நாம் துய்க்கும் இன்பங்கள் உதிரத்திற் கலந்தனவாம். 05

மேலும், நாம் இவர்களை வெல்லுதல், இவர்கள் நம்மை வெல்லுதல் - இவற்றுள் எது நமக்கு மேன்மையென்பது விளங்கவில்லை. எவரைக் கொன்றபின் நாம் உயிர்கொண்டு வாழ விரும்போமோ, அத்தகைய திருதராஷ்டிரக் கூட்டத்தார் போர்முனையில் வந்து நிற்கிறார்கள். 06




சிறுமையாகிய குறையால் இயல்பு அழிந்தவனாய் அறம் இன்னது என்றுணராமல் மயங்கிய அறிவுடன்., யான் உன்னைக் கேட்கிறேன். எது நன்றென்பதை எனக்கு நிச்சயப்படுத்திச் சொல்லுக. நான் உன் சீடன். உன்னையே சரணமெனப் புகுந்தேன். கட்டளை தருக. 07

பூமியின்மேல் நிகரில்லாத செல்வமுடைய ராஜ்யம் பெறினும், அன்றி வானோர்மிசை ஆட்சி பெறினும் புலன்களை யடக்கும் இயல்புடைய இந்த துயர் எம்மைவிட்டு நீங்குமென்று தோன்றவில்லை.'' 08

***சஞ்சயன் சொல்லுகிறான் : ..***

''பகைவரைக் கொளுத்தும் பார்த்தனங்கு பசுநிரை காக்கும் பகவனை நோக்கிப் 'போரினைப் புரியேன்' என்று வாய் புதைத்திருந்தான் ..'' 09



பாரதா, அப்போது கண்ணன் புன்னகை பூத்து,
இரண்டு படைகளுக்கும் நடுவே துயருற்று நின்ற பார்த்தனை
நோக்கி, இவ்வசனமுறைக்கின்றான். 10

**ஸ்ரீ பகவான் சொல்லுகிறார் : ..**

''துயரப்படத்தகாதார் பொருட்டுத் துயர் படுகின்றாய்.
ஞானவுரைகளு முரைக்கின்றாய்! இறந்தார்க் கேனும்
இருந்தார்க் கேனுந் துயர் கொளார் அறிஞர்.'' 11

இதன்முன் எக்காலத்திலும் இல்லாதிருந்திலேன். நீயும்
இங்குள்ள வேந்தர் யாவரும் அப்படியே. இனி நாம்
என்றைக்கும் இல்லாமற்போகவும் மாட்டோம். 12



ஆத்மாவுக்கு இவ்வுடலில் எங்ஙனம்
பிள்ளைப்பிராயமும், இளமையும், மூப்புந்
தோன்றுகின்றனவோ, அங்ஙனமே மற்றொரு சரீரப்பிறப்புந்
தோன்றுகிறது. தீரன் அதில் கலங்க மாட்டான். 13

குந்தியின் மகனே, குளிரையும் வெப்பத்தையும்,
இன்பத்தையும் துன்பத்தையும் தரும் இயற்கையின்
தீண்டுதல்கள் தோன்றி மறையும் இயல்புடையன.
என்றுமிருப்பனவல்ல. பாரதா, அவற்றைப் பாறுத்துக்கொள்.
14

யாவன் இவற்றால் துயர்ப்பட்டான், இன்பமுந்
துன்பமும் நிகரெனக் கொள்வான், அந்த தீரன்,
சாகாதிருக்கத்தருவான். 15

இல்லாதது உண்மை யாகாது. உள்ளது இல்லாத
தாகாது. உண்மையறிவார் இவ் விரண்டுக்குமுள்ள
வேற்றுமை யுணர்வார். 16

இவ்வுலகம் முழுதிலும் பரந்து நிற்கும் பொருள்
அழிவற்ற தென்றறி, இது கேடற்றது, இதனை யழித்தல்
யார்க்கும் இயலாது. 17

ஆத்மா (சரதன்) நித்தியன், அழிவற்றான, அளவிடத்
தகாதான். எனினும், அவனுடைய வடிவங்கள் இறுதியுடையன
என்பர். ஆதலால், பாரதா, போர் செய். 18

இவன்கொல்வானென்று நினைப் போனும்,
கொல்லப்படுவானென்று நினைப்போனும் - இருவரும்
அறியாதார். இவன் கொல்லுவது மில்லை,
கொலையுண்பதுமில்லை. 19

இவன் பிறப்பதுமில்லை, எக்காலத்திலும்
இறப்பதுமில்லை. இவன் ஒருமுறையிருந்து பின்னர் இல்லாது
போவதுமில்லை. இவன் பிறப்பற்றான் , அனவரதன். இவன்
சாசுவதன், பழையோன், உடம்பு கொல்லப்படுகையில் இவன்
கொல்லப்படான். 20

*(தொடர்ந்து வரும், மெய்சிலிர்க்க வைக்கும் ..)*

# ஆன்மீக ஹீரோக்கள் ..!



‘உலகின் முதலாவது சுப்பர்மேன் யார்? ’ என்ற நிகழ்ச்சி சில நாட்களுக்கு முன் ஒரு தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியது. சிறுவர்களின் நிகழ்ச்சியாகிய அதில் பெரியவர்களும் கலந்திருந்தனர்.

பெரும்பாலானவர்களின் விடைகள் பிரபல சுப்பர் ஹீரோக்களையே சுற்றி வந்தன. ஸ்பைடர் மேன், பேட் மேன், சுப்பர் மேன் என்று பட்டியல் நீண்டுகொண்டே சென்றது. அந்த ஹீரோக்களின் அதி சாகசக் காட்சிகளும் இடைஇடையே ஓடியது. யாரைத் தெரிவு செய்வதென்று தெரியாத அளவுக்கு ஒவ்வொரு ஹீரோவும் பிரமிக்க வைத்தார்கள். முடிவு என்னாயிற்று என்று தெரியவில்லை.

பக்தியும், கலகலப்பும் ..
இந்தப்பக்கத்தில்!.

## SUPER HEROES





இது இப்படியிருக்க, சமீபத்தில் ‘ஆனந்த விகட’னில் ஒரு கேள்வி, மதனிடம் கேட்கப்பட்டது. அதுவும் இந்த ‘சுப்பர் ஹீரோ’ பற்றிய கேள்விதான். அதற்கு அவர் ஒரேஒரு சொல்லில்தான் பதில் சொல்லிவிட்டுப் போனார். எனக்கோ தூக்கிவாரிப்போட்டுவிட்டது. அப்படிப்பட்ட ஞானம் மிக்க பதில் அது.

‘‘உலகின் முதலாவது ‘சுப்பர் மேன்’ யார்? ’’ என்ற அந்தக் கேள்விக்கு அவர் அளித்த அந்த ஒற்றைச் சொல் .. ‘அனுமான்’

ஒரு பாணை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, தமிழகத்து மக்களின் ஆன்மீக முதிர்ச்சிக்கு அடையாளமானார் மதன். வெல்டன் சேர்! ..

சரி, இனி விஷயம் .. சிறுவர்களைக் கவரக்கூடிய நாவல்களாகவும், பின்னர் அது சித்திரக் கதைகளாகவும், அதன்பின்னர் சினிமாவாகவும் சுப்பர் மேன்களின் கதைகள் சொல்லப்பட்டன. பிறகு பார்த்தால் அதிநவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய பிரம்மாண்டத்தோடு இக் கதைகள் காட்டப்பட்டபோது, உலகமே பார்த்து குதூகலித்தது. இப்படிப்பட்ட சாகச வீரர்கள் தீய சக்திகளை உடைத்தெறிந்து உலகத்தைக் காப்பாற்றுவதற்கு முன்னோடியாக ஒரு மொடல் இருந்திருக்க வேண்டுமே! அது யார்? .. சந்தேகமில்லாமல் நம்ம ஆஞ்சநேயர்தான் ..



உயரமான மாடிகளும், ஆகாயங்களும், நகரங்களும் இப்போதுள்ள சுப்பர் ஹீரோக்களுக்கு எப்படி விளை யாட்டு மைதானமோ, அதைவிட பல படிகள் தாண்டி பிரபஞ்சமெல்லாம் புகுந்து விளையாடியவர் அனுமான்.

இன்றைய சுப்பர்மேன்களின் சூட்சுமம் பெற்றரி யிலும், வயரிலும், சுவிட்சுகளிலும் உள்ளன. அனுமனு க்கு இதெல்லாம் இருக்கவில்லை. எல்லாமே சொந்த ஆத்ம பலம்தான். ப்ளஸ் பொயின்றாக கிடைத்த ஒரே அனுகூலம் ராமஜபம் மட்டுமே! .. இத்துனூன்டு வயதிலேயே சூரியனை உண்பதற்கு விண்ணிலே பாய்ந்தாரென்றால் வேறென்ன சொல்ல!

## விஞ்ஞான ஹீரோக்களும், மெஞ்ஞான ஹீரோக்களும் ..



பாலக வயதிலேயே ஆகாயமும், வனாந்திரங்களும் அனுமனால் திகில் கொண்டன. எந்த நேரத்தில் எந்த கிரகத்தை நோக்கிப் பாய்வார் என்றே சொல்லமுடியாது. அதிகளவான குழப்படிகளால் முனிவர்களிடத்தில் பெற்ற சாபமே ஒருவாறு அவரைக் கட்டுப்படுத்தியது. இதனால் சக்திகளை மறந்துபோய் அக்கடா என்றிருந்தவரை, சுந்தர காண்டத்தில் ராமர் வந்துதான் உசுப்பிவிட்டார். அன்றைக்கு களத்தில் இறங்கியவர், மகுடாபிஷேகம் முடியும்வரை உட்காரவில்லை.

கடலைத் தாண்டி, இலங்காபுரியின் மாடமாளிகைகள், கூடகோபுரங்கள் தாவி, ஒரு கட்டத்தில் தீவையே கொளுத்தி முடிக்கின்றார் என்றால் அந்த 'சுப்பர் பவர்' (ஆன்மபலம்) எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும்! இன்றைய நவீன சினிமாவின் எத்தனை டெக்னோலஜிகளாலும் படமாக்க முடியாத சாகசங்கள் அவை!

ஒரு ஸ்பைடர்மேன் தனது சிலந்திப்பின்னலால் நான்கு மாடிகள் தாவிமுடிக்கும் அரை நிமிடக்காட்சியை பலநூறு கெமராக்களும், ஆட்களும் படமாக்க பத்து நாட்களாகிறது. ஆனால், சஞ்சீவி மலையைப் பெயர்ப்பதும், சமுத்திர பூதத்தை அடக்குவதும், நெடிய விருட்ஷங்களைப் பிடுங்கி வீசுவதும் தத்ருப சாகஸக் காட்சிகளாக இருக்கும் -- ராமாயணத்தில்! எந்த மெகா டைரக்டரும் காட்ட முடியாத காட்சி -- மெய்சிலிர்க்கும் வரிகளில்!!

ஆதி காலக் குடிலுக்குள், புற்தரையில் உட்கார்ந்திருந்து எழுத்தாணியால் ஏற்கனவே வால்மீகி இந்த 'சுப்பர் ஹீரோ'வை வடித்துவிட்டார் ..




## அனுமனும், பீமனுமே உலகின் முதலாவது சுப்பர் ஹீரோக்கள்!

ஆகாய மார்க்கத்தில் அண்ணன் ஆஞ்சநேயர் சுப்பர் ஹீரோ என்றால், தரையில் தம்பி பீமன்தான் படு சுப்பர் ஹீரோ!

அதிவேக சாகஸங்களில் இன்று சுப்பர் ஹீரோக்கள் இருப்பதுபோலவே, உடல் பலத்திலும் டார்சான், ஹல்க், சேம்ஸன், ஹெர்க்குலிஸ் போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் ஒரு ரோல் மொடலை நம் சமயம் ஏற்கனவே படைத்து விட்டது. அந்த பலசாலி .. பீமன்!

மலைகளைப் பொருத்தி மனிதானாக்கியது போல பெருந்தோற்றம் இவனுடையது. மரங்களும், குன்றுகளும் அசைவது போலிருக்கும் இவனது நடவடிக்கைகள். மகாபாரதத்தின் சுவைக்கு இவனது வீரமே முக்கிய காரணம். பலம்பொருந்திய தேவ, அசுரர்கள் யாராயிருந்தாலும் மோதாமல் விடமாட்டான். பகாசுரன், ஜராசந்தன், இடும்பன், கீசகன், கடோத்கஜன் (மகன்) என்ற பெரும் பலசாலிகளை தூக்கிப்போட்டு விளையாடியிருக்கிறான். முக்கிய வில்லன்களாகிய துரியோதனன், துச்சாதனன் முதலியவர்களை பயங்கரமாகக் கொன்று பாரத யுத்தத்தை முடித்து வைத்தவனும் இவனே! .. எல்லாவற்றிற்கும் அந்த 'சுப்பர் பவர்' (ஆன்மீகம்) தான் காரணம் .. புரிந்ததா! ..



# கடன் சுமை வேண்டாமே ..

கற்றுத்தரும் கடைசிப் பக்கம் ..

'**க**டனாளியாகமட்டும் இருந்துவிடாதே!'

**என்று எச்சரிக்கிறது இந்த புராணக் காட்சி ..** மகா வேந்தனாக வாழ்ந்த அரிச்சந்திரன் பொய் சொல்லாத ஒரே காரணத்திற்காக முழு ராஜ்யத்தையும் பிடுங்கிக்கொண்டு விரட்டினார், விசுவாமித்திரர்.

தன் தவ வலிமையினால் இரண்டு பெண்களை உருவாக்கி, அவர்களுக்குத் திருமணம் செய்துவைத்த செலவையும் ஏற்கனவே எழுதி வைத்துக்கொண்டு, 'அந்தக் கணக்கையும் கொடு..' என்றுவேறு மிரட்டினார்.

எல்லாவற்றையும் இழந்து வெறும் துண்டை மட்டும் கட்டிக்கொண்டு நிற்கின்ற அயோத்தி மன்னன் அரிச்சந்திரன் இப்போது பத்து லட்சம் பொன் கடனாளி!

ஆறு மாதத்தில் கடனைச் செலுத்துவதாக வாக்களித்து வெளியேறினார்கள்.

**''அவனோடு கூடவே சென்று பணத்தை வாங்கி வா! '' என்று** தனது சீடனையும் கூடவே அனுப்பினார் விசுவாமித்திரர்.


மனைவியோடும், மகனோடும் எத்தனையோ துன்பத்துடன் பசி, தாகம் என்று அலைந்த மன்னவனை கூடவே வந்துகொண்டிருந்த சீடன் நிமிடத்திற்கு ஒருதடவை **'' பத்து லட்சம் பொன் எங்கே? நான் போகவேண்டும்! ..''** என்று நச்சரித்துக்கொண்டே இருந்தான்.

இதைத்தாளாத நிலையில் ஒரு கொடியவனிடம் தனது மனைவியையும், மகனையும் ஐந்து லட்சம் பொன்னுக்கு விற்றான் அரிச்சந்திரன். மிகுதி ஐந்து லட்சத்திற்கு தன்னையும் விற்று, ஒரு சுடுகாட்டில் வெட்டியானாக வேலை பெற்றான். பத்து லட்சம் பொன்னையும் கொடுத்து அனுப்பினான்.

புராணங்களில் வருகின்ற கதைகள் வெறும் தத்துவங்களை மட்டுமே சொல்வதில்லை. நாம் வாழவேண்டிய முறைகளையும் கூடவே தருகிறது. பொய் சொல்லாத உத்தமனாக வாழ்வது அப்புறம் இருக்கட்டும்.. கடனால் சீரழியாமல் வாழ்ந்தால் அதுவே பெரிதல்லவா!

**''பொய் சொல்லாததால்தானே அரிச்சந்திரன் நொந்து நூலானான் ..! நாங்கதான் பொய்யில கில்லாடியாச்சே! ..''** என்கிறீர்களா ?

இனி உங்கள் இஷ்டம்.



## அடுத்த ' விஜயத்தில் '
## வரப்போகும் இந்த அற்புத தெய்வம் யார்?.

வேதம் காத்த வெள்ளைப் பரிமுகன்..
நான்முகனைப் படைத்து, அவனுக்கு வேதம் உபதேசித்தவர் ..
சரஸ்வதி தேவிக்கே குரு என்னும் பெருமை பெற்றவர் ..

ஆகாயமும், பாதாளமும் இவரது காதுகள்! பூமியோ நெற்றி! கங்கையும்,சரஸ்வதியும் புருவங்கள்! சந்திரனும், சூரியனும் கண்கள்! சந்தியாதேவதை இவரது மூக்கு! பித்ரு தேவதைகள் பற்கள்! கோலோகம், பிரம்மலோகம் இரண்டும் உதடுகள்! காலராத்ரி கழுத்து ..

புராணங்கள் வர்ணித்து வணங்கும் இந்த அற்புத மூர்த்தியின் அழகையும், பெருஞ்சிறப்பையும் அடுத்த இதழில் வாசிப்பீர், பக்தி இன்பத்தில் மூழ்குவீர் ..

வீட்டில்
இருந்தபடியே
'பக்தி விஜயம்..'
இதழைப்பெற,
சந்தாதாரர்
ஆகுங்கள்!
தொடர்பு:
0713861168
0774335144
0232250071



உ

ஓம் ஸ்ரீராம ஜெயம்



# ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில்

வட்டக்கச்சி - கிளிநொச்சி

